PUBLIC LIBRARY
JAFFNA

ISSN 1391-9504

Vijey விஜய்

# விஜய்

20.11.2013 - மலர் 10, இதழ் 38



## திமில் டைனோசரின் எச்சங்கள் கண்டுபிடிப்பு

## செவ்வாய் செல்லவுள்ள 'பாம்பு ரோபோ'

## உலகின் தொழில்நுட்ப 7 அதிசயங்கள்

## சூழலை சமநிலைப்படுத்தும் ஈரநிலங்கள்

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சிறிய வீட்டுத்தோட்டம்



சிறிய வீட்டுத்தோட்டம் ஒன்றில் எவராலும் பழங்களையும் காய்கறிகளையும் பயிரிட முடியுமா? என்பது பலரது கேள்வியாக உள்ளது. அதற்குப் பதில்தான் ஆமாம்! என்பதாகும். சிறிய வீட்டுத் தோட்டமாயினும், நாளாந்தத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஏற்றவாறு சிறியளவில் காய்கறிகளையும் பழங்களையும் பயிரிடலாம். சரியான முறையில் அவற்றைப் பயிரிட்டு பராமரித்தால், சிறந்த பலனைப் பெறமுடியும்.

அதாவது, எமது குடும்ப அங்கத்தவர்களுக்கு விருப்பமான உணவுகளை எமது தோட்டத்திலேயே பயிரிட்டுப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன், நாளாந்தத் தேவைகளுக்கு ஏற்ற காய்கறிகளையும் பெற்றுக் கொள்ளலாம். பிரதானமாக எமது வீட்டுத்தோட்டத்தில் பெறப்படும் காய்கறிகள் மற்றும் பழங்கள் நச்சுத் தன்மையற்றவை. அவற்றில் இயற்கையான சுவையும் பலவித சத்துக்களும் அதிகளவில் காணப் படுகின்றன.

எமக்குத் தேவையெனின், காய்கறிகள், பழங்கள் மட்டுமன்றி; மருத்துவ குணம் மிக்க மூலிகைத் தாவரங்கள் மற்றும் சமையலுக்குத் தேவையான மேலதிக கீரைவகைகளையும் பயிரிடலாம். (புதினா, கொத்தமல்லி) வீட்டிலிருந்து பெறப்படும் உக்கி விடுகின்ற கழிவுப்பொருட்களினூடாகக் காபன் பசளையினைத் தயாரித்துக்கொள்ள முடியும்.அதனால், மண் வளப்படுகின்றது. வீட்டுத் தோட்டமும் சுத்தமடைகின்றது. அத்துடன், பயிர்கள் செழித்து வளர்ந்ததும் வீட்டுத்தோட்டமும் அழகிய சோலையாக மாறிவிடுகின்றது.

பாடங்களைப் படிக்கும் நேரத்தைத் தவிர்க்காமல், ஓய்வு நேரங்களில் வீட்டுத் தோட்டத்தினைப் பராமரிக்க முடியும். வீட்டு உறுப்பினர்களையும் இதில் ஈடுபடுத்திக்கொள்ள முடியும். பொழுதுபோக்காக வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதனூடாக விவசாயப் பணிகள் தொடர்பான அறிவையும் காலப் போக்கில் பெற்றுக்கொள்ளலாம். நடைமுறை ரீதியில் நாம் கற்றவற்றை ஏனையோருக்குச் சொல்லிக்கொடுக்கவும் முடியும்.

அன்றாடம் உணவுகளுக்காகச் செலவிடும் தொகையில் ஒரு பகுதியினை மீதப்படுத்திக்கொள்ளவும் முடியும். மேலும், உடலை வருத்தி வீட்டுத்தோட்ட செய்கைகளை மேற்கொள்வதனால், ஆரோக்கியத்தையும் மனமகிழ்ச்சியையும் பெற்றுக்கொள்ளலாம்.

அமெரிக்காவின் ரோ(ச்)செஸ்டர் பல்கலைக்கழக Neuromedicine மைய இணை இயக்குனர் டொக்டர் மெய்கென் நெடர்கார்ட் தலைமையிலான ஆய்வுக்குழுவொன்று உறக்கத்திற்கும் மூளைக்குமிடையிலான தொடர்பு குறித்து ஆய்வொன்றினை மேற்கொண்டது. அந்த ஆய்வில், நாம் ஆழ்ந்து உறங்கும்போது எமது மூளையிலுள்ள நச்சுக்கள் நீக்கப்படுவதாகக் கண்டறிந்துள்ளனர்.



# மூளையைச் சுத்தமாக்கும் ஆழ்ந்த உறக்கம்

அதாவது, எமது ஆழ்ந்த உறக்கத்தின்போது, எமது மூளையில் உள்ள செல்கள் சுருங்குகின்றன. அதன்போது, மூளை வெளியேற்றும் ஒருவகை திரவத்தின்மூலம் நாள் முழுவதும் மூளையில் ஏற்பட்டுள்ள நச்சுக்கள் வெளியேற்றப்படுகின்றன. மூளையின் வெளிப்புறம் படிந்திருக்கும் மூலக்கூறுகளின் சிதைந்த பொருட்களும் நச்சு ப்ரோட்டின்களும் வெளியேற்றப்படுவதால், மூளை சார்ந்த பாதிப்புகள் ஏற்படாமல் பாதுகாக்கப்படுகின்றது. இந்த ஆய்விற்கென எலிகளையே பயன்படுத்தி உள்ளனர். மனிதர்களைப் பரிசோதித்துப் பார்ப்பதன்மூலம் மேலும் பல தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் ஆய்வுக்குழு தெரிவிக்கின்றது.


விஜய் — TOP NEWS உடன்வழங்கும் மாதம் ஒரு Galaxy Smartphone...

கல்விசார் APPS கள்

பிரதி புதன்கிழமைகளில் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு மாத இறுதியிலும் 'Top News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விகளுக்கான சரியான விடையினை அம்மாதத்தில் வெளிவந்த 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வெல்லுங்கள்



மாதாந்தம் Phone இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

இந்த Smartphone ஆனது, பல்வேறுபட்ட அறிவுசார் Tamil/Sinhala/ English Dictionary, English Grammar Test, Math Solver, Science Bank, MS Work-2013, Picture Dictionary Tamil, IQ Test, General Knowledge Questions போன்ற பல்வேறுபட்ட அறிவுசார் Apps களை நிறுவும் வசதி கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

'Top News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும். (கூப்பன் மாத இறுதியில் பிரசுரமாகும்)

சரியான விடையை அனுப்புவோரில் மாதாந்தம் ஒரு அதிர்ஷ்டசாலி தெரிவுசெய்யப்பட்டு அவருக்கு ஒரு Samsung Galaxy Star GT-s5282 Duos Phone பரிசாக வழங்கப்படும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திமில் டைனோசரின் எச்சங்கள் கண்டுபிடிப்பு




ஸ்பானிய தொல்பொருள் ஆய்வாளர்களால் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்களுக்குரிய புதிய டைனோசர் இனமானது, ஏனைய டைனோசர்களைப் போலன்றி, மாறுபட்டதாகக் காணப்படுகின்றது. காரணம், இதன் முதுகில் பெரியதொரு திமில் காணப்படுகின்றமையாகும். நாம் நன்கு அறிந்த டைரெனசோரஸ் ரெக்ஸ், வெலொசிரெப்டர் போன்ற மாமிச உண்ணி டைனோசர்களின் மூதாதை இனமாக இந்தத் திமில் டைனோசரைக் குறிப்பிடலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

'லாஸ் ஹோயாஸ்' எனும் அகழ்வாராய்ச்சிப் பகுதியிலேயே இந்த அபூர்வ டைனோசரின் எச்சங்களைத் தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர்.

விஜய

வீஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk

லாஸ்ஹோயாஸ் அகழ்வாராய்ச்சிப் பகுதியானது, ஸ்பெய்னின் குசென்கா மாவட்டத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேசமானது, டைனோசர் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வாளர்களுக்கு அற்புதமானதோர் இடமாகும்.



இப்புதிய டைனோசர் இனத்திற்குக் 'கொன்காவெனடோர் கோர்கொவேட்டஸ்' *(Concavenator corcovatus)* எனப் பெயர் வைத்துள்ளனர். 'கோர்கொவேட்டஸ்' என்றால் தமிழில் 'திமில்' என அர்த்தமாகும். ஆரம்ப க்றிடேசியஸ் யுகத்தில் அதாவது, இற்றைக்கு 120 அல்லது 150 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த டைனோசர்களின் எச்சங்களே லாஸ் ஹோயாஸ் பகுதியில் இருந்து கண்டெடுக்கப்படுவதாக அகழ்வாராய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். எனினும், அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த டைனோசரின் எலும்புகள்கூட இப்பகுதியில் அற்புதமாகவும் நல்ல முறையிலும் பாதுகாப்பாக இருந்துள்ளதாக மெட்ரிட் நகர பல்கலைக் கழக அகழ்வாராய்ச்சியாளர் ஃபெர்னாண்டோ எஸ்காஸோ தெரிவித்தார்.

"இது உண்மையிலேயே அற்புதமான-புதிய கண்டுபடிப்புத் தான். இந்த டைனோசர் இனம் இதற்கு முன்னர் ஒருபோதும் கண்டுபிடிக்கப்படாத, பின்னங்கால்களால் நடமாடிய மாமிச உண்ணி வகைக்குரியதாகும்" என எஸ்காஸோ மேலும் விளக்கமளித்தார்.

இதன் வாய் நுனியில் இருந்து வால் நுனி வரையான மொத்த நீளம் 6 மீற்றர் (20 அடி) ஆகும். மிகப்பெரிய மாமிச உண்ணி டைனோசர் இனமாகக் கருதப்படும் 'கார்ச்சரோடொன் டோசரியன்' டைனோசர்களின் ஆரம்ப வகையாக இந்த திமில் டைனோசர் கருதப்படுகின்றது. கார்ச்சரோடொன்டோசரியன் டைனோசரானது, முற்காலத்தில் தென்திசைக் கண்டங்களில் வாழ்ந்ததாகக் கருதப்படுகின்றது.



இதேவேளை, பாத விரல்களில் கூரிய நகங்களையுடைய இரு கால்களால் நடமாடிய-பெரிய உருவம் கொண்ட ஒருவகை டைனோசர் பற்றிய தகவல்கள் ருமேனியாவில் இருந்து வெளியாகியுள்ளன. எவ்வாறாயினும், இந்த டைனோசர் எச்சங்களை ஆராய்வதன்மூலம் இற்றைக்கு மில்லியன் கணக்கான வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த டைனோசர் இனங்கள் குறித்துப் பல தகவல்களை அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும் என ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.



**இரஞ்சித் ஜெயகர்**

இலவச SMS சேவை
முக்கிய செய்திகள், சிந்தனை துளிகள், கவிதைகள், ஜோக்ஸ், வாழ்கைக்குத் தேவையான குறிப்புகள் போன்றவற்றை உங்கள் தொலைபேசிக்கு இலவசமாக பெற்றுக் கொள்ள
twitter.com/SmSview
1st Step
F (space) SmSview & Send to 40404
2nd Step
Type Ur Full Name & Send to 40404
Hotline - 0777 96 76 81

இலவச SMS சேவை
முக்கிய செய்திகள், மருத்துவ குறிப்புக்கள், சமையல் குறிப்புக்கள், வேலைவாய்ப்பு தகவல்கள் தங்க நிலவரங்கள் போன்றவற்றை உங்கள் தொலைபேசிக்கு இலவசமாக பெற....
twitter.com/mobihut
1st Step
F (space) Mobihut & Send to 40404
2nd Step
Type Ur Full Name & Send to 40404
Hotline - 078 589 888 4, 0721 960 963

விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
DIPLOMA IN ENGLISH கிலாஸ் போகாமலே இங்லீஸ் படிக்கலாம்.
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
மேலதிக விபரங்களுக்கு
முழுப்பெயர் ,முகவரியைக் குறிப்பிட்டு 0773- 123 523 க்கு SMS செய்யுங்கள்.
மேலதிக விபரங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
@- 10 பாடத்தொகுதிகள் தமிழ் விளக்கத்துடன்
@- ஆங்கில பேச்சுப்பயிற்சி / உரையாடல் வீடியோ சீடி 4 நான்கு
@- Video CD வழிகாட்டி புத்தகம் ஒன்று.
@- அழகிய கைக்கடிகாரம் ( Watch ) ஒன்று./ மாணவர் அடையாள அட்டை
@- 2014 ஆம் ஆண்டு வர்ண கலண்டர் ஒன்று இலவசம்.
@- Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன வழங்கப்படும்.
பாடநெறிக்கட்டணம். ரூபா 1800/- மாத்திரம் அறவிடப்படும். மாற்றுக்கட்டணம் இல்லை.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 081-222 77 11 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முட்கதவு



## மாயாஜால உடை

04 கே. விஜயன்

தொடர்கதை

அமைச்சர் அதிசய உடை தைப்பவர்களைக் காணச் சென்றார். அது மக்கள் நடமாட்டம் இல்லாத ஓர் ஒதுக்குப்புரமான இடம். அங்கே குகை போன்ற ஒரு வீட்டின் கதவு மூடிக்கிடந்தது.

அமைச்சர் கட்டளை இட, படை வீரர்களில் ஒருவன் படபட வென கதவை தட்டினான். அது கரடுமுரடான பழங்காலக் கதவு. சேவகன் பலமாக தட்டவே அது அவன் கையைப் பதம் பார்த்துவிட்டதோ என்னவோ "ஆ" என கத்தினான். பின்னர் அதனை உற்றுப் பார்த்தபோதுதான் அதில் பெரிய முட்கள் நீண்டுகொண்டிருப்பது தெரிந்தது. இவன் தட்டியபோது அந்த முட்கள்தான் குத்திவிட்டன.

"யாராவது கொஞ்சம் பொறுக்கவும். பக்கத்து ஊர் மன்னருக்கு ஆடை தையல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சில நிமிடங்களில் முடிந்துவிடும். அதுவரை கதவைத் திறக்க முடியாது" வீட்டினுள்ளிருந்து ஒரு கரகரப்பான குரல் ஒலித்தது.

"அமைச்சர் வந்திருக்கிறார்" என்று சேவகன் பதில் குரல் கொடுத்தான்.

"தைப்பவர் தியானத்துடன் தைத்த உடைக்கு கடைசிக்கட்ட மெருகூட்டிக்கொண்டிருக்கிறார். அது கலையக்கூடாது. சில நாழிகைகள் பொறுத்துக்கொள்ளவேண்டும் அமைச்சரே" என்று அமைச்சரின் செவிகளில் அந்தக் குரல் ஒலித்தது.

ஒரு சேவகன் கைலாகு கொடுக்க, மிகவும் கஷ்டத்துடன் தனது குண்டு உடம்பைக் குதிரையிலிருந்து கீழிறக்கி வைத்தார் அமைச்சர். சவாரி களைப்புத்தீர அங்குமிங்கும் நடக்க ஆரம்பித்தார்.

நிமிடங்கள் கரைந்தன.

அப்பொழுது,

மேடு, பள்ளமுமான ஒரு கரடுமுரடான பாதையில் தட்டுத்தடுமாறி மாட்டு வண்டி ஓடுவது போன்ற 'கடக் முடக்', 'கடக் முடக்' என்ற பயங்கரமான சப்தம் கேட்டது.

"ஐயோ அம்மா!" என்று அமைச்சர் பயத்தில் கத்திவிட்டார்.

சேவகர்களும் பயத்துடன் கத்திக்கொண்டு நடுக்கமுடன் திரும்பிப் பார்த்தனர்.

கதவு விலகிக்கொண்டிருந்தது.

கதவு திறபடும் சப்தம்தான் அவ்வாறு கேட்டது. அவ்வளவு பெரிய பழைய கதவு அது. கொஞ்சம் திறபட்டபோது குள்ளனின் வழுக்கைத் தலை வெ... தெரிந்தது. உருளையைப் போன்ற அந்த குள்ளமனிதன் மேலும் இரண்டாக மடிந்து நின்றான்.

"மன்னிக்கவேண்டும் பிரபு! வாருங்கள் உள்ளே போகலாம்" என்று குனிந்த தலை நிமிராமல் சொன்னான்.

பயத்தில் வியர்த்துவிட்டிருந்த அமைச்சர் சுதாகரித்துக்கொண்டவராக வீட்டினுள் காலடி எடுத்து வைத்ததும் திடுக்கிற்றுப் போனார்.

வீட்டினுள்.

நாக்கைத் தொங்கப் போட்டவாறே கண்களை உருட்டிக்கொண்டு, நரகாசுரன் வாளைத் தூக்கிக்கொண்டிருக்கிறான். அவன் முன்னால் ஒரு சிறிய பெட்டி. அதன் மீது ஒரு விளக்கு. அது நீலநிற வெளிச்சப் பூக்களை விசிறியடித்துக் கொண்டிருக்கிறது. தன்னைக் கண்டதும் நரகாசுரன் கோபத்துடன் பயந்து பாய்ந்து, வருவது போலிருக்கவே அமைச்சர் குடல் பதற நடுங்கினார். ஒரே ஓட்டமாக ஓடி விடக் கால்கள் வெடவெடத்தன. ஆனால், அவருக்கு முன்னரே வீரசேவகர்களில் இருவர் விழுந்தடித்துக்கொண்டு வெளியே ஓடிப்போய்விட்டார்கள். (தொடரும்)



# மன்னரின் ஜாதகம்

ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவர் ஒருநாள் தமது அரண்மனை ஜோதிடரை அழைத்து, தமது ஜாதகக் குறிப்பை அவரிடம் கொடுத்தார்.

"இதைப் பாருங்கள், என்னுடைய எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதைச் சொல்லுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

ஜோதிடர், மன்னரது ஜாதகத்தின் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்த்தார். பின்னர் அவர், "அரசே, உங்களுடைய உறவினர்கள் அனைவரும், தங்களுக்கு முன்னதாகவே இறந்துவிடுவார்கள். தங்களது கைகளாலேயே அவர்களுக்கு இறுதிச் சடங்குகள் செய்ய நேரிடும்" என்று கூறினார்.

இதைக் கேட்ட ராஜாவுக்குக் கோபம் வந்துவிட்டது. ஏனென்றால், உறவினர்கள் மீது அவருக்கு அளவுகடந்த பாசம் இருந்தது. உடனே, சேவகர்களை அழைத்து, "இந்த ஜோதிடருக்கு ஆயுள் தண்டனை அளிக்கிறேன். உடனே சிறையில் அடையுங்கள்!" என்று உத்தரவு பிறப்பித்தார். அதன்பின்னர், வேறொரு ஜோதிடரை அழைத்து வரச் செய்தார். அவரிடம் தனது ஜாதகத்தைக் கொடுத்து, தனது எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதைப் பார்க்கச் சொன்னார். ஜாதகத்தை ஆராய்ந்த அவர், "அரசே! உங்களுடைய ஜாதகம் மிகவும் நல்ல ஜாதகம். தங்களுடைய உறவினர்கள் அனைவரையும் விட தாங்கள் நீண்ட காலத்துக்கு வாழ்வீர்கள்" என்றார். ராஜாவின் முகத்தில் மகிழ்ச்சி! அந்த ஜோதிடருக்கு வெகுமதிகள் கொடுத்து அனுப்பி வைத்தார்.

"இரண்டு சோதிடர்களும் சொன்ன செய்தி ஒன்றுதான்! ஆனால், ஒருவருக்குக் கிடைத்தது ஆயுள் தண்டனை. இன்னொருவருக்கு வெகுமதி கிடைத்தது என்ன காரணம் என்று அமைச்சர் ராஜகுருவிடம் கேட்டார். அதற்கு "இரண்டாவது ஜோதிடர், ஜோதிடத்துடன் புத்திசாலித்தனத்தையும் கையாண்டார் அவ்வளவுதான்" என்றார் ராஜகுரு.

# வாழும்போதே உதவி செய்!

ஓர் ஊரில் செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவருக்குக் குழந்தைகள் இல்லை. எனினும், அவர் பெருங்கருமியாக இருந்தார். யாருக்கும் எந்த உதவியும் செய்யமாட்டார். ஒருநாள், அந்தக் கருமி, துறவி ஒருவரிடம் சென்றார்.

"சுவாமி, நான் இறந்த பின்னர் என் சொத்துக்கள் அனைத்தையும் தர்ம காரியங்களுக்குத்தான் கொடுக்கப்போகிறேன். ஆனால், ஊர் மக்கள் என்னைக் கருமி என்று திட்டுகிறார்கள். ஏன் என்று தெரியவில்லை!" என்று வருத்தத்துடன் தனது குறையைக் கூறினார்.

அதற்குத் துறவி, "வருந்தாதே! ஒரு சமயம் பசுவுக்கும் பன்றிக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலை இப்போது உனக்குச் சொல்கிறேன். அதன்மூலம் உனக்கு உண்மை விளங்கும்" என்றார்.



"சொல்லுங்கள் சுவாமி" என்றார் அந்தக் கருமி.

"ஒரு பன்றி, பசுவைப் பார்த்து, "பசுவே, மக்கள் எல்லோரும் உன்னைப் பற்றியும் உன் இனிய இயல்புகள் பற்றியும் புகழ்ந்து பேசுகின்றனர். நீ அவர்களுக்காகப் பால் தருகிறாய். ஆனால், நானோ என் உடலையே இறைச்சிக்காக மக்களிடம் கொடுக்கிறேன். இருந்தாலும் மக்கள் என்னைப் பாராட்டாமல் இகழ்கிறார்களே? இதன் காரணம் என்ன?" என்று வருத்தத்துடன் கேட்டது. பன்றி சொல்வதை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த பசு, "பன்றியே... நீ சொல்லுவது உண்மைதான். நாம் இருவருமே மக்களுக்காகப் பயன் தருகிறோம். ஆனால், நான் உயிருடன் இருக்கும்போதே பயன்படுகிறேன்!" என்றது.

இவ்வாறு துறவி சொல்லி முடித்ததும், தன் தவறை உணர்ந்து, "வாழும்போதே பிறருக்கு வாரி வழங்குவேன்" என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்றார் அந்த செல்வந்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிரதம் பற்றிய சுவையான தகவல்கள்




நவீன புகையிரத காலப் பகுதி 1800 களில் ஆரம்பிக்கின்றது. இன்றைய உலகில் பொருட்களை போக்குவரத்துச் செய்தலில், 40 சதவீதம் புகையிரதத்தினூடாகவே மேற்கொள்ளப்படுகின்றது. புகையிரதத்தினை அபிவிருத்தி செய்த முன்னோடிகளாக ஜேம்ஸ்வொட், ஒலிவர் வென்ஸ், மெத்தியூ டரே, ரிச்சட் டெவ்திக் மற்றும் ஜோர்ஜ் ஸ்டீவன்சன் ஆகியோரைக் குறிப்பிட முடியும். நவீன புகையிரதத்தின் வரலாறு இவர்களின் கண்டுபிடிப்புகளினூடாகவே ஆரம்பிக்கின்றது.

புகையிரதத்தின் சக்கரமும் தண்டவாளமும் மிகவும் சொற்ப அளவிலேயே தொடர்புறுகின்றன. முதலாவது நீராவிப் புகைவண்டி 1830 இல் அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்பட்டது. அதே ஆண்டில் அந்தப் புகைவண்டியினைவிடப் பெரிய அளவிலான புகைவண்டி அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டது. பிரித்தானியாவின் முதலாவது புகையிரதப் பாதை 1603-1604 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் உருவாக்கப்பட்டது.

முதலாவது சுரங்கப் புகைவண்டிப் பாதை லண்டனில் உருவாக்கப்பட்டது.

வட அமெரிக்காவின் மேற்கு மற்றும் கிழக்கு கரையோரப் பகுதிகள் 1866 மே மாதம் 10 ஆம் திகதி இணைக்கப்பட்டன. யூனியன் பசுபிக் மற்றும் சென்ட்ரல் பசுபிக் ஆகிய புகைவண்டிப்பாதைகள் இரண்டினை இணைத்து இந்த பகுதிகள் இணைக்கப்பட்டன. 3000 மைல் நீளம் கொண்ட இந்தப் புகையிரதப் பாதையின் காரணமாக நியூயோர்க்கிலிருந்து கெலிஃபோர்னியா வரை செல்வதற்கு ஒரு சில நாட்களே தேவைப்பட்டன. அல்லாவிடின், இந்தப் பயணத்திற்குப் பல மாதங்கள் வரை தேவைப் படலாம்.

நவீன கால இங்கிலாந்தின் பயன்பாட்டில் உள்ள புகையிரதப் பாதைகளின் நீளம் பதினைந்தாயிரம் கிலோமீற்றரைவிட அதிகமானது.





இவற்றுள் 14,353 கி.மீற்றர் புகைவண்டிப்பாதைப் பயணிகள் போக்குவரத்துக்கெனப் பயன்படுத்தப்படுகின்றது. 40,000 இற்கும் அதிகமான பாலங்கள் மற்றும் சுரங்கப்பாதைகள் என்பனவற்றைக் கடந்து இவை பயணிக்கின்றன.

புகையிரதப் பாதைகள் மற்றும் புகையிரதங்கள் பயன்பாட்டில் இல்லாதிருந்தால், முதலாவது மற்றும் இரண்டாவது உலக மகா யுத்தங்கள் நீண்டகால மற்றும் பாரியளவிலான சேதங்களை ஏற்படுத்திய யுத்தங்களாக அமைந்திருக்காது. புகைவண்டி சுற்றாடலுக்கு இயைபான போக்குவரத்துச் சாதனமாகும். உலகின் அதிக நிறைகொண்ட புகையிரதம் 95,000 தொன் நிறை கொண்டதாகும். புகைவண்டி 7.3 கி.மீற்றர் நீளம் கொண்டது. அது நன்கு வளர்ச்சி பெற்ற 27 குதிரைகளின் நிறைகளுக்கு சமமானது.

மெக்லேவ் புகைவண்டி மணித்தியாலத்திற்கு 550 கி.மீற்றருக்கு அதிகமான வேகத்தில் செல்லும் தன்மை கொண்டது. 2020 ஆம் ஆண்டில் அதன் வேகம் மணித்தியாலத்திற்கு 800 கி.மீற்றர் வரை அதிகரிக்கக்கூடும். உலகின் அதிவேகமான புகைவண்டியாக பிரான்சின் TGV புல்லட் புகைவண்டியினைக் குறிப்பிட முடியும். அது மணித்தியாலத்திற்கு 584 கி.மீற்றர் வேகத்தில் பயணித்து, நிறுத்துவதற்குச் சுமார் 16 கி.மீற்றருக்கு முன்பே சுக்கானை அழுத்தி விடுவார்களாம்.


செலிங்கோ லை.:.ப்

ரன்தரு சாரிகா

## அறிவைத் தேடிச் செல்லும் சிறார்களுக்கு




இன்னும் பல இடங்களை பார்ப்பதற்கான வாய்ப்பு!

### 12 வயதிற்கு குறைந்த தம்பி தங்கைகள் எவரேனும் விண்ணப்பிக்க முடியும்

கல்வி கற்கும் தம்பி தங்கைகளின் அறிவை வளர்க்கும் பொருட்டு, செலிங்கோ லை.:.ப் ரன்தரு சாரிகா எனும் கல்விச் சுற்றுலா ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இம் முறை நாங்கள் கொழும்பு தேசிய நூதனசாலை, கோள் மண்டலம், BMICH, பத்தரமுல்லை தியத பூங்கா மற்றும் கொழும்பு நகரத்தைச் சுற்றியுள்ள சில பிரதான இடங்களை பார்ப்பதற்கு சிறார்களை அழைத்துச் செல்ல உள்ளோம்.

### செலிங்கோ லை.:.ப் கிளை உள்ள சகல நகரங்களிலிருந்தும் 4 வெற்றியாளர்கள்

எந்தவொரு செலிங்கோ லை.:.ப் கிளைக்கும் சென்று, 2014ம் ஆண்டுக்கான கால அட்டவணையுடன், விண்ணப்பப் பத்திரத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள். அவ் விண்ணப்பப் பத்திரத்தை பூர்த்தி செய்து, 'செலிங்கோ லை.:.ப்', இல. 134, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். இல்லையெனில் எந்தவொரு கிளையிலும் ஒப்படைக்க முடியும்.

விண்ணப்பங்களை ஒப்படைக்க வேண்டிய இறுதித் திகதி 2013 நவம்பர் 30.

வெற்றிபெறும் தம்பி, தங்கைகள் குலுக்கல் மூலமே தெரிவு செய்யப்படுவர். வெற்றிபெறுவோர் அவர்களுடைய தாய் அல்லது தந்தை அல்லது பொறுப்பாளர் உடன் இச்சுற்றுலாவில் பங்குபெற முடியும். அதற்கான அனைத்து வசதிகளும் அவர்களுக்கு இலவசமாக செய்து கொடுக்கப்படும்.

மேலும் 750 ஆறுதல் பரிசுகள்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

WP/GT/3936

PHOENIX O&M

செலிங்கோ லை.:.ப்

செலிங்கோ லை.:.ப் டவர், 106, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 5.
கம்பனி பதிவு இல. PQ24 தொ.இல.: (011) 2 461 461 ஈமெயில்: service@ceylife.lk இணையம்: www.ceylincolife.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் மொத்த நிலப்பரப்பில் 6 சதவீதமானவை ஈரநிலங்களாகும். பண்டைய காலம் முதல் மனிதனின் இருப்புக்கும் ஏனைய உயிரினங்களின் இருப்புக்கும் ஈரநிலங்கள் உதவின. ஆனால், மனிதனின் பொறுப்பற்ற செயற்பாடுகளினால் ஈரநிலங்கள் அழிந்துபோகும் அபாயத்தினை எதிர்கொண்டுள்ளன. பூமி சிறந்த வாழ்விடமாகத் தொடர்ந்தும் நிலைக்க வேண்டுமாயின், இந்த ஈரநிலங்களையும் பாதுகாக்க வேண்டும்.



# சூழலை சமநிலைப்படுத்தும் ஈரநில

## ஈரநிலம் என்றால்...

இயற்கையான சூழலில் அமைந்துள்ள, வருடம் முழுவதும் நீரினால் மூழ்கியுள்ள பிரதேசம் அல்லது காலத்துக்கு காலம் நீரினால் மூழ்கும் பிரதேசங்கள் 'ஈரநிலம்' என்று அறிமுகப்படுத்தப்படுகின்றன. அதாவது, தரை மட்டத்திலிருந்து 6 மீற்றருக்குக் குறைவான கடல்சார் பகுதிகள் உட்பட, ஓடுகின்ற அல்லது ஓடாமல் இருக்கின்ற நன்னீர், உவர்நீர் அல்லது சவர்நீர் என ஏதாவதொன்றினால் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ மூழ்கியுள்ள இயற்கையான அல்லது செயற்கையான பகுதிகள் ஈரநிலங்களாகக் கொள்ளப்படுகின்றன. சதுப்பு நிலங்கள், நீர்ப்பாதைகள், ஏரிகள், களப்புகள், கழிமுகங்கள், கடற்கரை சார் சதுப்பு நிலங்கள், உள்ளக நீர்த்தேக்கங்கள், ஆற்று வாய்ப்பகுதி என்பன ஈரநிலங்களுக்கு உரிய பகுதிகளாகும்.



## உலக ஈரநில தினம்

1971 இல் செய்துகொள்ளப்பட்ட ரம்சார் உடன்படிக்கையின்படி, அந்த உடன்படிக்கையினை அமுல்படுத்துவதற்குச் சர்வதேசப் பிரஜைகளின் கவனத்தை ஈர்ப்பது அவசியமாகும். அதனையிட்டு, 1997 ஆம் ஆண்டு 'உலக ஈரநில தினம்' பிரகடனப்படுத்தப்பட்டது. அன்று முதல் ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 2 ஆம் திகதியில் 'உலக ஈரநில தினம்' அனுஷ்டிக்கப்படுகின்றது.

## இலங்கையில் உள்ள ஈரநிலங்கள்

இலங்கையில் பலதரப்பட்ட ஈரநிலங்களைக் காண முடியும். இவற்றுள் ரம்சார் ஈரநிலங்கள் என்று பெயரிடப்பட்ட ஈரநிலங்களும் உள்ளடங்குகின்றன. நமது நாட்டில் ஈரநிலங்களைப் பிரதானமாக இயற்கை ஈரநிலம், செயற்கை ஈரநிலம் என இரண்டாக வகுக்கலாம். இவ்விரண்டையும் நன்னீர் ஈரநிலம், உவர்நீர் ஈரநிலம், சவர்நீர் ஈரநிலம் என்று மேலும் 3 பிரிவுகளாகப் பிரித்தறிய முடியும்.

### இயற்கை ஈரநிலங்கள்

*** நன்னீர் ஈரநிலம்:**

உள்ளக நீர்த்தேக்கங்கள், ஆறுகள், நன்னீர் சதுப்பு நிலங்கள், வயல்கள் என்பன இதில் அடங்கும்.

*** சவர்நீர் மற்றும் உவர்நீர் ஈரநிலங்கள்:**

கழிமுகங்கள், ஆற்றுவாய், களப்பு, பவளப்பாறைகள் மற்றும் கடற்பாசிகள், வளரும் கடற்பகுதி, உப்பு விளையும் சதுப்பு நிலம் என்பன இவற்றுள் அடங்கும்.

### செயற்கையான ஈரநிலம்

ஏரிகள், கட்டப்பட்ட நீர்த்தேக்கம் மற்றும் குளங்கள், உயிரினங்கள் வளர்க்கப்படும் தடாகங்கள் என்பன இதில் அடங்கும்.

## ரம்சார் உடன்படிக்கை

'ரம்சார்' என்பது ஈரான் நாட்டின் ஒரு நகரமாகும். 1971 ஆம் ஆண்டு இந்த நகரில் முக்கியமானதொரு சர்வதேச உடன்பாடு எட்டப்பட்டது. அதுதான் 'ஈரநில உடன்படிக்கை' ஆகும். பூமியின் மொத்த நிலப்பரப்பில் 6 சதவீதமாக உள்ள ஈரநிலங்களைப் பாதுகாத்துக்கொள்ளவென ஏற்படுத்தப்பட்ட இந்த உடன்படிக்கையே 'ரம்சார் உடன்படிக்கை' என்று பிரபல்யம் பெற்றுள்ளது.









## உயிர்ப்பல்வகைமை நிறைந்த ஈரநிலங்கள்

ஈரநிலங்களில் பலதரப்பட்ட உயிரினங்களைக் காண முடியும். பல ஈரநில உயிரினங்களுக்கு இப்பிரதேசங்கள் இருப்பிடமாக இருப்பதே இதற்குக் காரணமாகும். அங்கு வசிக்கும் உயிரினங்களுக்கும் வசிக்காத உயிரினங்களுக்கும் தேவையான உணவுகள் ஈரநிலங்களில் காணப்படுகின்றன. மண்ணில் காற்று குறைவடையும்போது, அதற்கு ஈடு கொடுக்கும் வகையிலான விசேட ஏற்பாடுகள் இங்குள்ள தாவரங்களில் உண்டு. நன்னீரிலும் களப்பிலும் வசிக்கும் நத்தைகள், வண்ணத்துப்பூச்சிகள், இறால்கள், சிங்கி இறால்கள், மீன் இனங்கள், பட்சிகள், பாலூட்டிகள், ஈரூடகவாழிகள், ஊர்வன என்பனவும் ஈரநிலங்களுக்குரியவையாகும். ஈரநிலங்கள் சுற்றுலாப் பறவைகளுக்கும் தற்காலிக இருப்பிடமாக உள்ளன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லங்கள்

## இலங்கையில் ரம்சார் ஈரநிலங்கள்

2013 ஒக்டோபர் மாதம் வரையில், இலங்கையில் 06 ஈரநிலங்கள், ரம்சார் ஈரநிலங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

- பூந்தல தேசிய வனம்
- ஆனவிழுந்தாவ வாவிகள் தொகுதி (சரணாலயம்)
- மாது கங்கை
- வங்காலை சரணாலயம்
- குமண-குடும்பிகல சரணாலயம்
- வில்பத்து சரணாலயம்

## ஈரநிலங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்ப்போம்

ஈரநிலங்களில் உள்ள காடுகளை அழித்தல், மீன் நிரப்புதல் என்பனவற்றின் காரணமாக ஈரநிலங்கள் பாதிப்பினை எதிர்கொள்கின்றன. விவசாய ரசாயனப் பொருட்கள், குப்பைக் கழிவுகள் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள் என்பனவற்றை ஈரநிலங்களில் இடுவதனால், இப்பகுதிகள் சுற்றாடல் பாதிப்பினை எதிர்கொள்கின்றன. ஈரநிலப்பகுதிகளில் வளரும் தாவர இனங்களும் மீன் இனங்களும் ஏற்றுமதிக்காகவும் வேறு தேவைகளுக்காகவும் அளவின்றிப் பயன்படுத்தப்படுவதனாலும் ஈரநிலங்கள் பாதிப்பை எதிர்கொள்கின்றன. மண் அகழ்வு, கண்டல் காடுகளை அழித்தல், சுண்ணாம்புக்கல் அகழ்வு ஆகிய காரணங்களினாலும் ஈரநிலச் சூழல் தொகுதி பாதிப்படைகின்றது. இதனால், ஈரநிலங்களின் உயிர்ப்பல்வகைத் தன்மைக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. ஈரநிலங்கள் அழிவடைவதனால், சிறிய மழையின்போதும் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்படுகின்றது.

எனவே, இயற்கையின் சமநிலையைப் பாதுகாப்பதற்கு, ஈரநிலங்களைப் பாதுகாப்பது அவசியமாகும். ஈரநிலங்களைச் சரியான முறையில் பயன்படுத்துவதனூடாக, ஈரநிலங்களைப் பாதுகாக்க முடியும். ரசாயனப் பசளைகளைக் குறைவாகப் பயன்படுத்துதல், திட்டமிட்ட வகையில் நிர்மாணப்பணிகளை மேற்கொள்ளல், நீர் மூலங்களில் கழிவுகளைக் கொட்டுவதனைத் தவிர்த்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளினூடாக ஈரநிலங்களைப் பாதுகாக்க முடியும்.



## ஈரநிலங்களினால் கிடைக்கும் நன்மைகள் சில...

- ★ உலகின் பிரதான உணவான அரிசி மற்றும் மீன் உணவுகள் கிடைக்கின்றன.
- ★ எமது உணவுக்குச் சுவையூட்டும் உப்பு ஈரநிலத்திலேயே விளைவிக்கப்படுகின்றது.
- ★ கண்டல் காடுகளில் சுவையான பழங்கள் கிடைக்கின்றன.
- ★ நீர் கரைபுரண்டோடும் போது அடித்துவரப்படும் களிமண்ணைக் கொண்டு செங்கற்கள், ஓடுகள் தயாரிக்கப்படுகின்றன.
- ★ முகமூடி, பாய் பின்னுவதற்குத் தேவையான மூலப் பொருட்கள் ஈரநிலத்திலிருந்து பெறப்படுகின்றன.
- ★ உணவு சமைக்கவும் இதர தொழிற்சாலைப் பணிகளுக்குத் தேவையான எரிபொருட்கள் ஈரநிலத்தில் இருந்து பெறப்படுகின்றன.
- ★ மீன்பிடித் தொழில் (வாவி, ஆறு, ஏரி, களப்பு) மற்றும் விவசாயம் ஆகியவற்றில் ஈடுபடுவோர், ஈரநிலத்தினை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர்.
- ★ ஈரநிலங்கள் நீரைச் சுத்திகரிக்கின்றன. இதனால், ஈரநிலங்களை 'பசுமையின் சுவாச நாடி' என்று குறிப்பிட முடியும்.
- ★ ஈரநிலங்கள் சிறந்த சுற்றுலாத் தலங்களாகும்.
- ★ ஈரநிலங்களில் வளரும் தாவர இனங்களால் கடல் அரிப்பும் தடுக்கப்படுகின்றது.

பிரியா

## 2014 உலக ஈரநில தினம் (பெப்ரவரி 02)

வனஜீவிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் நடைபெறுகின்ற இப்போட்டிக்கு 'விஜய்' பத்திரிகை ஊடக அனுசரணை வழங்குகின்றது.

உலக ஈரநில தினத்தை முன்னிட்டு மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் ஈரநிலம் தொடர்பாக நடத்தப்படும் குறுக்கெழுத்துப் போட்டி.



வாரம் தோறும், 10 சுற்றுச்சூழல் புத்தக பொதிகளை வெல்லும் வாய்ப்பு

*இறுதிப் போட்டியில் வெற்றியீட்டுபவர் தனது குடும்பத்தாருடன் தேசிய வனவிலங்கியல் பூங்காவொன்றின் சுற்றுலா பங்களாவில் இரண்டு நாட்களைக் கழிப்பதற்கான வாய்ப்பு.*

இறுதிப் போட்டியின்போது, ஐந்து வாரங்களில் கிடைக்கப்பெற்றுள்ள சகல குறுக்கெழுத்துப்போட்டிக் கூப்பன்களிலிருந்தும் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் 28 வெற்றியாளர்களுக்குப் பணப்பரிசும் வழங்கப்படும்.

- ★ 1 ஆம் இடம் - ரூபா 10,000
- ★ 2 ஆம் இடம் - ரூபா 7,500
- ★ 3 ஆம் இடம் - ரூபா 5,000
- ★ 25 பேருக்கு தலா 2,500 ரூபா வீதம் ஆறுதல் பரிசுகள்

**மேலிருந்து கீழ்**

01. வட அமெரிக்காவிலுள்ள பஞ்சவாவிகளில் ஒன்று.
02. சுத்தமான நீருக்கு இல்லை.
03. தாவரங்களுக்கு உரமாகவும் பயன்படுத்தலாம்.
04. உயரத்தில் மரத்தைவிட சிறிதாக வளரும் தாவரங்கள்.
05. 'நீலக்கோள்' எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுவது.
06. எஸ்கிமோக்களின் வாசஸ்தலம்.
08. வானவில்லின் நிறங்களில் ஒன்று.

**இடமிருந்து வலம்**

01. தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ நீரால் மூழ்கியிருக்கும் பகுதி.
04. மனிதன் உபயோகித்த முதல் உலோகம்.
06. சிலவேளைகளில் மழையுடன் இதுவும் வரும்.
07. எரிபொருளாகப் பயன்படுத்தப்படும்.
09. மரம், செடி, கொடி, புல், பாசி, பூஞ்சணம் என்பனவற்றை உள்ளடக்கிய பெரும் உயிரினப் பிரிவு.

## 'ஈரநில' குறுக்கெழுத்துப் போட்டி 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | |
| | | | | | 3 |
| | 4 | | 5 | | ரு |
| 6 | | | 7 | | |
| | | 8 | | | |
| ளு | | 9 | | | |

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வனஜீவிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினதும் விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தின் ஊழியர்களதும் குடும்ப அங்கத்தவர்கள் இந்தப் போட்டியில் கலந்துகொள்வதற்கு அனுமதி கிடையாது.

தபாலிடும் முகவரி:

ஈரநில
குறுக்கெழுத்துப்
போட்டி-01
'விஜய்'
த.பெ.எண்-2037
கொழும்பு.




பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
பாடசாலை : ........................................
தொலைபேசி : ........................................
நகரம் : ........................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிதம்-I (தரம்-4)

பெயர்: ........................................................

★ வித்தியாசமான உருவைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கீறிடுக.

01) 1.  2.  3. 

02) 1.  2.  3. 

கீழ் உள்ள படத்துடன் தொடர்புடைய சொற்கூட்டத்தைத் தெரிவுசெய்க.

03) 
1. நிழல், உணவு, சுவாசிக்காது.
2. உணவு, நிழல், எரிபொருள்.
3. இடம்பெயரும், உணவு, நிழல்.




04) 
1. அறிவு, வாக்கியம், பாடங்கள்.
2. அறிவு, சொற்கள், விளையாட்டு.
3. விளையாட்டு, எழுத்து, பாடங்கள்.

05)  இவ்வுருவிலுள்ள செவ்வகங்களின் எண்ணிக்கை யாது?
1. 9 2. 8 3. 10

06) பின்வருவனவற்றில் பிழையான கோவையைத் தெரிவுசெய்க.
1. 3X1+5=8 2. 4X4X3=48 3. 5+2X2=15

07) மாலை 2.30 மணிக்கு வீட்டில் இருந்து புறப்பட்ட மாலதி, 6.50 இற்கு மீண்டும் வீட்டிற்கு வந்தாள். எனின், அவள் வெளியில் செலவழித்த காலம் யாது?
1. 4 மணித்தியாலம் 2. 4.20 நிமிடங்கள்
3. 4.10 நிமிடங்கள்

08) பின்வருவனவற்றுள் ஒற்றை எண் எது?
1. 2312 2. 2315 3. 1256

09) காய்கறிகள் கத்தரிக்காய் என்பதைக் காட்டும் மிகப் பொருத்தமான உரு எது?
1.  2.  3. 

10) 2m நீளமான நாடாவில் 10cm துண்டுகள் எத்தனை வெட்டலாம்?
1. 20 2. 10 3. 5

11) 27, 31, .........., 39, 43
1. 35 2. 33 3. 34

12) ஒரு நாளைக்கு 2 ரூபா வீதம் உண்டியலில் நாணயக்குற்றியை போடும் காந்தன், 28 நாட்களில் உண்டியலில் போட்ட மொத்தப் பணம் யாதாயிருக்கும்?
1. ரூபா 28 2. ரூபா 14 3. ரூபா 56

13) 3 ☐ 4   1. 2, 6   2. 1, 6   3. 1, 5
1 2 ☐
4 5 0

14) ☐ + ☐ =10 எனின், ☐ இன் பெறுமானம் யாதாயிருக்கும்?
1. 10 2. 4 3. 5




15) 2 மணித்தியாலத்திலுள்ள நிமிடங்கள் எத்தனை?
1. 60 2. 120 3. 30

16) 1 ஆம் திகதி வெள்ளி எனின், 8 ஆம் திகதி என்ன கிழமையாகும்?
1. வியாழன் 2. வெள்ளி 3. சனி

17) இரண்டு சதுரங்களை ஒன்றோடு ஒன்று இணைக்கும்போது தோன்றும் வடிவம் பின்வருவனவற்றுள்;
1. சதுரம் 2. செவ்வகம் 3. கூறமுடியாது

18) 1kg சீனியின் விலை ரூபா 150 எனின், 100g சீனியின் விலை யாது?
1. ரூபா 10 2. ரூபா 15 3. ரூபா 20

19) 7310 இன் மூன்றின் இடத்தின் பெறுமானம் யாது?
1. முந்நூறு 2. முப்பது 3. மூவாயிரம்

20) ஒரு சதுரமுகியின் முகங்களின் எண்ணிக்கை யாது?
1. 12 2. 6 3. 4

### பகுதி -II

01) 3429+2427= ......................................

02) 756 X 6 = ..........................................

03) 7009 ஐ எண்சட்டத்தில் காட்டுக.

04) 3.7kg இல் எத்தனை gகள் உள்ளன?..............................

05) 50cm நீளமும் 10cm அகலமும் கொண்ட புத்தகத்தின் பரப்பளவு யாது? ..............................................

06) 1m நீளமும் 2m அகலமும் கொண்ட தோட்டத்தின் சுற்றளவு யாது?
....................................................

07) 3kg 780g பலாப்பழத்தில் இருந்து 2kg 050g வெட்டி எடுக்கப்பட்டது. எனின், மிகுதியாக உள்ள பலாப்பழத்தின் நிறை யாது? ..............................................

08) 2479 இவ் வெண்ணின் மூலம் ஆக்கக்கூடிய பெரிய எண்ணிற்கு சிறிய எண்ணிற்கும் இடையிலான வித்தியாசம் யாது? ....................

09) சதுரக்கூம்பகத்தில் உள்ள விளிம்புகள் எத்தனை? ..........................

10) சதுரக்கூம்பகத்திலுள்ள முகங்கள் எத்தனை? ................................

11) சதுரக்கூம்பகத்திலுள்ள உச்சிகள் எத்தனை? ................................

12) 6 பலூன்களின் விலை ரூபா 18 எனின்,ஒரு பலூனின் விலை யாது?
....................................................

13) ஒருநாள் 18 மணித்தியாலங்களில் எத்தனை, மணித்தியாலங்கள் உள்ளன? ....................................

14) ஒரு வாரம் மூன்று நாட்களில் மொத்தம் எத்தனை நாட்கள்? ............

15)  இவ்வுருவின் 1/4 பங்கிற்கு நிறம் தீட்டுக.

விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.

# தெரிந்து கொள்வோம்

✱ தமிழ் எழுத்தாளர்களில் 'ஞானபீட விருது' பெற்றவர்கள் யார்?

i அகிலன் - 1975 'சித்திரபாவை' எனும் நாவலுக்காக வழங்கப்பட்டது

ii ஜெயகாந்தன் - 2002 இல் இவரது முழுப்படைப்புக்களுக்காகவும் வழங்கப்பட்டது






✱ பாப்பரசரின் அறிக்கைகளை 45 மொழிகளில் ஒலிபரப்பும் வானொலி நிலையம் எது?

வத்திக்கான் ரேடியோ

✱ இலங்கை நாடாளுமன்றத்தில் இருக்கும் நீதியின் சின்னமான செங்கோலை நிர்மாணித்தவர் யார்?

எஸ்.சாள்ஸ்

✱ தென் அமெரிக்கக் கண்டத்தில் இருந்து தெரிவான முதல் பாப்பரசர் யார்?

16 ஆவது பெனடிக் - ஆர்ஜன்டீனா



✱ உலகப்புகழ்பெற்ற கலைக்களஞ்சியம் ஒன்று 2010 இல் தனது பதிப்புக்களை நிறுத்திக்கொண்டது. அது எந்தக் கலைக்களஞ்சியம்?

பிரித்தானியாவிலிருந்து 1768 முதல் 244 வருடங்களாக வெளியிட்டு வந்த 'பிரிட்டானிகா என்சைக்ளோபிடியா' நிறுத்தப்பட்டது. தற்போது C.D ஒன்லைனில் வெளிவருகின்றது

✱ உலகில் அதிகமாகப் பேசப்படும் மொழி சீன மொழியாகும். 88.5 கோடி மக்கள் பேசுகின்றனர். இதற்கு அடுத்ததாகப் பேசப்படும் மொழிகள் எவை?

ஸ்பானிஷ்- 33.2 கோடி மக்கள்

ஆங்கிலம் - 32.2 கோடி மக்கள்



✱ இலங்கையின் வரலாற்றைக் கற்பதற்குக் 'கல்வெட்டுகள்' பிரதான இடத்தைப் பெற்றுள்ளன. கல்வெட்டுகளில் காணப்படம் 'பிரஹ்மிய' எழுத்துக்களை வாசித்து விளக்கியவர் யார்?

கலாநிதி எஸ்.பரணவிதான



✱ உலகில் மிகவும் நீளமான நாடு எது?

சிலி- தென் அமெரிக்கா

தொகுப்பு:
உடுவை பரந்தாமன்

## iPod வெற்றியாளர்கள்

✱ 23.10.2013

விடை: காய் லூன்

வெற்றியாளர்:
எஸ்.சவுந்தரி,
12/1, லூர்து மாவத்தை,
சிலாபம்.

✱ 30.10.2013

விடை: நுவரெலியா

வெற்றியாளர்:
க.கஜதீபன்,
ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை,
யாழ்ப்பாணம்.

✱ 06.11.2013

விடை: 2012 ஆம் ஆண்டு

வெற்றியாளர்:
எம்.அஜ்மல்,
15/4 B,
நவரத்ன ஜயவீர மாவத்தை,
வெல்லம்பிட்டிய.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிளர்ச்சித் தலைவனின் திட்டம்

பிரதானிகளின் குணாதிசயங்களை ஆங்கிலேயர் நன்கு அறிந்து வைத்திருந்தனர். அதனால், பட்டம் பதவிகளில் அவர்கள் தொடர்ந்து இருக்க இடம் அளித்தனர். வரப்பிரசாதங்களை பெற்றுக்கொண்டு சம்பளம் உள்ளிட்ட முன் அனுபவித்த அனைத்தையும் தொடர்ந்து அனுபவிக்க இடமளித்தனர்.

இதற்கிடையில், கண்டியைச் சுற்றிவளைப்பதற்காகத் திட்டமிட்ட நாளும் வந்தது. கண்டியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி ஆங்கிலேயரின் கொள்கைப் பிரச்சாரங்களை முன்னெடுக்க இது நல்ல தருணம் என ஆளுநரும் டொய்லியும் சிந்தித்தனர். பிரவுன்றிக் ஆள்பதியைச் சந்திப்பதற்காக வருகை தந்த கனிஷ்ட பிலிமத்தலாவையை கௌரவிக்கும் பொருட்டு கல்கிஸை மாளிகையில் வரவேற்பு வழங்கப்பட்டது. இருவரும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். பின்னர் ஆள்பதி அவருக்குச் சகல உதவி உபகாரங்களைச் செய்வதோடு பாதுகாப்பு வழங்குவதாகவும் உறுதி அளித்தார். அத்துடன், கண்டிக்குப் படை அணிகளை அனுப்புவதற்கும் இதனை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொண்டார்.

கிளர்ச்சித் தலைவன், பிரதானி ஒருவன் எனக் குறிப்பிட்ட ஒரு சிலரின் கோரிக்கைகளை மாத்திரம் ஆங்கிலேயர் கருத்தில் கொள்ளவில்லை. ஏனைய பிரதானிகளினதும் கருத்துக்கள் எவ்வாறு உள்ளன என ஆராய்ந்தறிய அவர்கள் விரும்பினர். அதன்படி, 'டொய்லி' அவர்கள் மொல்லிகொட மற்றும் ஏனைய பிரதானிகளைச் சந்தித்தார். மகிழ்ச்சிகரமான பதில் அவர்களிடம் இருந்து கிடைத்தன. எனினும், மொல்லிகொட மற்றும் எஹெலப்பொல ஆகியோரிடையே நிலவிய பரஸ்பரம் பகைமை நிலை ஒரு தடையாகத் தென்பட்டது. அதேபோல், மன்னனுக்கு எதிராக யுத்தத்தை ஆரம்பிக்க எத்தகைய காரணமும் இல்லாமையும் மற்றொரு தடையாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொபைல் ஃபோன் மற்றும் டிஜிட்டல் கெமரா மூலமாக எடுக்கும் படங்கள், பார்ப்பதற்கு அவ்வளவு அழகாக இருக்காது. அவற்றினை edit செய்த பின்பே படங்கள் வண்ணமயமாக இருக்கும். இவ்வாறு படங்களை edit செய்ய மொபைல் ஃபோன்களுக்கென்று பல்வேறு இலவச எப்ளிகேஷன்கள் உள்ளன. அதுவும் Android சாதனங்களுக்கு என்றால், படங்களை edit



# படங்களை edit செய்து அழகூட்ட 'XnRetro'



செய்துகொள்ளலாம். அதற்கமைய, முதலில் மென்பொருளைத் தரவிறக்கி, கணினியில் நிறுவிக் கொள்ளவும். பின் XnRetro மென்பொருளை Open செய்து, குறிப்பிட்ட படத்தைத் தெரிவுசெய்யுங்கள். அதன் பின்னர், வேண்டிய editing வேலைகளைச் செய்துவிட்டு, படத்தை சேமித்துக்



செய்ய, பல்வேறு இலவச மென்பொருள்கள் உள்ளன.

கணினிகளில் பயன்படுத்தக் கூடியதாக, அதிலும் Windows இயங்குதளத்திற்கு ஏற்ற, இலகுவாகப் பயன்படுத்தத் தக்கவாறான photo edit மென்பொருள்கள் அவ்வளவாக இல்லை. எனினும், 'XnRetro' மென்பொருளானது, இதனைச் சாத்தியப்படுத்துகின்றது.

www.xnview.com என்ற இணையத்தளத்திலிருந்து இந்த மென்பொருளை இலவசமாகத் தரவிறக்கம்

கொள்ளலாம். இந்த மென்பொருளில் edit செய்துவிட்டு நேரிடையாகச் சமூக வலைத் தளங்களில் பதிவேற்றம் செய்துகொள்ளவும் முடியும் என்பது சிறப்பம்சமாகும்.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, நொவெம்பர் மாதம் 20 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# விஜய் நுட்பம்

எஸ்.பிரதீப்

2013, நொவெம்பர், 20, புதன்கிழமை



# Samsung அறிமுகப்படுத்தும் சிறுவர்களுக்கான கைக்கணினி

Samsung நிறுவனம் சிறுவர்களுக் கென்றே பிரத்தியேகமான கைக்கணினி (Tablet) ஒன்றினை வடிவமைத்து-அறி முகப்படுத்தியுள்ளது. 'Galaxy Tab 3 Kids' என்று இதற்குப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தக் கைக்கணினியானது, கண்கவர்



மஞ்சள் நிறத்தில் காணப்படுவதோடு, அதனைச் சுற்றிச் செம்மஞ்சள் நிற றப்பர் கவசத்தையும் கொண்டுள்ளது.

அமெரிக்காவிலும் தென் கொரியா விலும் முதலில் அறிமுகமான இந்தக் கைக்கணினி, தற்போது பெரும்பாலான நாடுகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கைக்கணினி 7 அங்குலத் தொடுதிரையினைக் கொண்டுள்ளதோடு, கூகிளின் Android 4.1 Jelly Bean இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அத்துடன், 1.2 GHz வேகத்தில் இயங்கும் Processor, 1GB RAM மற்றும் 8GB உள்ளகச் சேமிப்பு நினைவகத்தினையும் கொண்டுள்ளது. இவை தவிர, 3 megapixel களை உடைய பிரதான கெமராவையும் megapixel களை உடைய துணைக் கெமராவையும் உள்ளடக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




இதிலுள்ள Kids Store எனும் பிரத்தியேகச் சேவையானது, சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள், பொழுதுபோக்கு அம்சங்களையும் மூன்று வயதிலிருந்து அதற்கு மேற்பட்ட சிறுவர்களுக்கான கற்றல் சார்ந்த எப்ளிகேஷன் களையும் உள்ள டக்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறித்த திகதியில் மின்னஞ்சலை அனுப்புவதற்கு Gmail தரும் வசதி!




Gmail இல் முன்கூட்டியே மின்னஞ்சலொன்றைத் தட்டச்சுச் செய்து சேமித்துவிட்டு, குறிப்பிட்ட நாளில் அல்லது குறிப்பிட்ட நேரத்தில் அந்த மின்னஞ்சல் தானாகவே செல்லும் விதத்திலான வசதி ஒன்று உள்ளது. இதற்கு நீங்கள் Date,Time போன்றவற்றைத் தெரிவுசெய்து கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்தால், அதே திகதியில் அல்லது நேரத்தில், குறித்த மின்னஞ்சல் செல்லவேண்டியவருக்குச் சரியாகச் சென்றுவிடும்.



இந்த வசதியைப் பெற முதலில் நீங்கள் www.rightinbox.com என்ற தளத்திற்குச் செல்லுங்கள். தளத்தில் Install now என்ற தெரிவைக் க்ளிக் செய்து, அந்தச் செயலியைப் பதிவிறக்கம் செய்து, உங்கள் கணினியில் நிறுவிக்கொள்ளுங்கள்.

அவ்வாறு நிறுவிக்கொண்ட பின்னர், அதனை எவ்வாறு செயற்படச் செய்வது என இங்கு பார்ப்போம்:

இம்மென்பொருளை நிறுவியதும் உங்கள் Gmail ஐத் திறந்துகொள்ளுங்கள். அங்கு மின்னஞ்சல் அனுப்புவதற்கான compose தெரிவைக் க்ளிக் செய்யுங்கள்.

அப்போது send now என்ற button இற்கு அருகில் send later என்ற button புதிதாக வந்திருக்கும். அதில் க்ளிக் செய்தால், உங்களுக்கான தெரிவுகள் காட்டப்படும். நீங்கள் உங்களுக்குத் தகுந்தவாறு அதில் Date,Time போன்றவற்றை நிர்ணயித்துவிடுங்கள். அவ்வளவுதான்...! நீங்கள் நிர்ணயித்த நேரத்தில், உங்கள் மின்னஞ்சல் சேர வேண்டியவருக்குச் சரியாகப் போய்ச் சேர்ந்துவிடும்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Image File களை pdf கோப்பாக மாற்ற ஓர் இலவச மென்பொருள்





Image File களை ஒரே கோப்பாக ஒன்றிணைக்க வேண்டுமெனில், நாம் அந்த Image File களை pdf கோப்பாக மாற்றினால் மட்டுமே முடியும். Image File களை இவ்வாறு pdf file ஆக மாற்ற ஓர் இலவச மென்பொருள் வழிசெய்கிறது.

'Weeny Free Image to PDF Converter' என்பதே அந்த மென்பொருளாகும். அதனைத் தரவிறக்க http://www.weenysoft.com/free-image-to-pdf-converter.html எனும் இந்த இணைப்பைப் பயன்படுத்துங்கள்.

## அதனை எவ்வாறு செய்வது?

இந்த மென்பொருளைக் குறிப்பிட்ட தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து, கணினியில் நிறுவிக்கொள்ளவும். பின்னர், இந்த மென்பொருளைத் திறந்து pdf ஆக மாற்ற வேண்டிய Image களைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். அடுத்து, Convert Now என்னும் button ஐ அழுத்தி மாற்றம் செய்துகொள்ளுங்கள்.

கீழ்ப்புறமாக உள்ள Settings என்ற button ஐ அழுத்தி Security Settings எனும் பகுதியில் கடவுச்சொல்லை உள்ளிட்டு, Convert செய்தால், உங்களது pdf கோப்பினைத் திறப்பதற்குக் கடவுச்சொல் கொடுத்தே திறக்க வேண்டியிருக்கும். இந்த முறையானது, உங்களது முக்கிய ஆவணங்களைப் பாதுகாக்க நல்லதோர் ஏற்பாடாகும். இது தவிர, இந்த இலவச மென்பொருளைக் கொண்டு நீங்கள் உருவாக்கும் pdf கோப்பிற்கு watermark இட்டுக்கொள்ளவும் முடியும்.






# மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் 'Zeno R25'





ரொபோக்கள் மனித உலகில் நாளுக்கு நாள் நுழைந்தவண்ணமுள்ளன. ரொபோக்களின் வருகையினால், மனிதனால் செய்யப்பட்டு வந்த பாரிய வேலைகள் ஓரளவுக்குக் குறைக்கப்பட்டு, அந்தப் பொறுப்பு ரொபோக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மனித உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடிய ரொபோ ஒன்றினை டெக்ஸாஸிலுள்ள RoboKind எனும் நிறுவனம் தயாரித்துவருகிறது. இதற்கு 'Zeno R25' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த ரொபோவினை மேலும் மேம்படுத்தும் பொருட்டு, RoboKind நிறுவனமானது, Kickstarter தளத்தினூடாகப் பிரசாரத்தினை மேற்கொண்டு வருகின்றது. Robokind நிறுவனம் சில காலங்களுக்கு முன்பிருந்தே இத்தகைய மனித உருக்கொண்ட ரொபோக்களை உருவாக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த ரொபோவின் விற்பனை விலை 2,700 அமெரிக்க டொலர்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.










# உலகின் உயர் தொழில்நுட்ப அதிசயங்கள் 7

உலக அதிசயங்கள் பற்றி அறிந்திருப்பீர்கள்! ஆனால், உலகின் ஏழு உயர் தொழில்நுட்ப அதிசயங்கள் பற்றித் தெரியுமா?




இவை பற்றிய தரப்படுத்தல் பட்டியல் அண்மையில் வெளியாகியுள்ளது.

இந்த ஏழு அதிசயங்களும் தொழில்நுட்ப உலகில் மிகவும் முன்னேற்றம் கண்டவையாக அறியப்படுகின்றன. கூகிள் கூட்டுத்தாபன தலைமையகமான Googleplex, Apple தலைமையகம், Levi's Stadium, Apple Store, Industrial Lights and Magic's Datacenter, Facebook தலைமையகம், The Eden Project என்பவையே அந்த ஏழு உயர் தொழில்நுட்ப அதிசயங்களுமாகும். இவை பற்றி மேலதிக விபரங்களை http://blog.hostgator.com/2013/09/23/infographic-7-high-tech-wonders-world/ எனும் இணைப்பின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**அன்பு வாசகர்களே...!**

'நுட்பம்' பகுதியில் வெளியாகும் தகவல்கள் குறித்து உங்கள் கருத்துக்களை அறிய விரும்புகின்றோம். அத்துடன், இப்பகுதியூடாக நீங்கள் மேலதிகமாக அறிய விரும்புகின்ற கணினி சார்ந்த விடயங்கள் குறித்தும் எமக்கு அறியத்தாருங்கள். nutpamvijey@gmail.com எனும் மின்னஞ்சலூடாக, உங்கள் கருத்துக்களையும் நீங்கள் அறிய விரும்பும் விடயங்களையும் இன்றே முன்வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத் தகவல் தொழில்நுட்பம் General Information Technology GIT

## இணைய இணைப்பு



கணினி ஒன்றினை இணைய சேவை வழங்குனர் ஒருவருக் கூடாகவே, இணையத்துடன் இணைத்துக் கொள்ள முடியும். அவ்வாறு கணினி ஒன்றில் இணைய இணைப்பை ஏற்படுத்தி, இணையத்தைப் பயன்படுத்து வதற்குப் பின்வருவன முக்கியமானவை:

I. கணினி (Computer)
II. தொலைபேசி இணைப்பு (Telephone Line) தற்போது தொலைபேசி இணைப்பு இல்லாமலேயே, இணைய இணைப்பை வழங்கும் தொழில்நுட்பமும் பயன்பாட்டில் உள்ளது.
III. இணைய சேவை வழங்குனர் (ISP -Internet Service Provider/internet connection, user name, password)
IV. மொடம் - Modem/NIC (Pc Card) அல்லது அதற்கு மாற்றீடான உபகரணம்.


### இணையப் பாவனைக் கணக்கு (Internet Connection Account/ISP)

இணையத்தில் காணப்படுகின்ற சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இணைய இணைப்பு ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். இதற்கென இணைய சேவை வழங்குனரிடம் (Internet Service Provider-SLT, Suntel, Dialog போன்றவை) பதிவு செய்து பயனர் பெயர் (user name), கடவுச்சொல் (password) என்பனவற்றுடன், அந்த இணைய சேவை வழங்குனரின் இணைய இணைப்புத் தொலைபேசி இலக்கத்தையும் பெற்றிருத்தல் வேண்டும். இந்த user name, password, phone number ஆகியவற்றைக் கணினியில் உள்ள Dial up Program இல் வழங்கி Dial செய்வதன் மூலம், ISP இன் கணினியுடன் எமது கணினியை இணைக்கலாம்.

இப்போது இவ்வாறு செய்யாமலேயே இணையத்துடன் இணையக் கூடிய 4G போன்ற தொழில்நுட்பங்களும் பாவனைக்கு வந்துவிட்டன.


### இணைய இணைப்பில் 5 வகைகள்

#### 1. DIAL UP CONNECTION (TCP/IP)





சாதாரணமாக வீடுகளில் பயன்படுத்தப்படுகின்ற தனிநபர் கணினிகளில் இந்த வகையான இணைப்பே பயன்படுத்தப்படும். கணினியையும் telephone line ஐயும் இணைப்பதற்காக modem பயன்படுத்தப்படும். இவ்வகைக் கணக்குகளை மாதாந்த வாடகை அடிப்படையில் அல்லது முன்கட்டணம் செலுத்தப்பட்ட அட்டைகள் மூலமும் பயன்படுத்தலாம். ஒப்பீட்டளவில் குறைந்த கட்டணம் உடையதாகும். இவ்வகை இணைய இணைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கும்போது, தொலைபேசி இணைப்பைப் பயன்படுத்த முடியாது.

#### 2. ISDN (INTEGRATED SERVICES DIGITAL NETWORK)





வர்த்தக நிறுவனங்கள் மற்றும் ஸ்தாபனங்களில் இவ்வகை இணைப்புக்களே பயன்பத்தப்படுகின்றன. இதற்கெனக் கணினியில் ISDN Modem பொருத்தப்பட வேண்டும். ஒப்பீட்டளவில் Dialup line ஐ விட, உயர்ந்த கட்டணத்தையும் கூடிய வினைத்திறனையும் கொண்டிருக்கும்.

#### 3. BROARDBAND CONNECTION





Digital தொழில்நுட்ப சேவை வழங்குனர்கள் இவ்வகை இணைப்புகளை வழங்குவார்கள். இதற்குக் கணினியில் NIC(Network Interface Card) பொருத்தப்பட்டிருத்தல் அவசியமானதாகும். ஒப்பீட்டளவில் வேகம்கூடிய இணைப்பாகும். இணைய இணைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கும் போது தொலைபேசி இணைப்பையும் பயன்படுத்தலாம்.

#### 4. LEASED LINE/DELICATE LINE



இணைய உலாவு நிலையங்கள் (Internet Browsing Center), வங்கிகள் (Bank) போன்றவற்றில் இவ்வகை இணைப்பே பயன்படுத்தப்படுகின்றது. இது கூடிய கட்டணத்தைக் கொண்டதாகும். 24 மணித்தியாலமும் செயற்படக்கூடியதாகும். இணைப்பின் திறனுக்கு ஏற்றவாறு கணினியின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம். இணைப்பு வேகம் அதிகரிக்க அதிகரிக்கக் கட்டணம் அதிகரிக்கும்.

#### 5. ADSL Line/Asynchronous Digital Subscriber Line




சில தொலைபேசி நிறுவனங்கள், தமது வாடிக்கையாளர்களுக்கு மட்டும் தொலைபேசி இணைப்புடன், ஒரே நேரத்தில் இயங்கக் கூடிய வகையில் இவ்வகை இணைப்புக்களை வழங்குகின்றன. இந்த இணைப்பினை 24 மணி நேரமும் பயன்படுத்தலாம்.

ஒப்பீட்டளவில் Leased Line ஐ விட குறைந்த கட்டணத்தைக் கொண்டதாகும். இவை வெவ்வேறு பெயர்களோடு வழங்கப்படுகின்றன. இவற்றுக்கு மாற்றீடாகத் தற்போது மேம்படுத்தப்பட்ட அதிவேக 4G இணைப்புக்களும் இணையப் பாவனைக்கு வழங்கப்படுகின்றன. ஆயினும், இது இன்னமும் பரவலாகப் பாவனைக்கு வரவில்லை.

ஏனையவற்றுடன் ஒப்பிடும்போது இது மிக வேகம் கூடியதாகவும் இலகுவான பயன்பாட்டைக் கொண்டதாகவும் இருக்கும். இந்த இணைப்புக்காக வழங்கப்படும் சாதனத்தில் Wi-Fi வசதியும் காணப்படும். எனவே, மிக இலகுவாக ஏனைய கணினி மற்றும் மொபைல் சாதனங்களை இந்த இணைய இணைப்பில் இணைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்மீனின் சுழல் திசைக்கு எதிர்த் திசையில் சுழலும் சூரியக் குடும்பம் கண்டுபிடிப்பு

ஒரு சூரியக் குடும்பத்தில், சூரியன் சுழலும் திசையிலேயே அதன் கோள்களும் தத்தமது நீள்வட்டப் பாதையில் சுழலும். ஆனால், அவ்வாறன்றி, சூரியன் சுழலும் திசைக்கு, எதிர் திசையில் சுழல்கின்ற கோள்களை உடைய சூரியக் குடும்பம் ஒன்று முதல் தடவையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கெப்லர் விண்கலம் சேகரித்தனுப்பிய தகவல்களை ஆய்வுக்கு உட்படுத்தியபோதே, இந்தக் கண்டுபிடிப்புக் குறித்துத் தெரியவந்துள்ளது. 'கெப்லர் 56' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தச் சூரியன், நமது சூரியனைவிடச் சற்று அதிக எடை கொண்டது. இதனை இரண்டு கோள்கள் சுற்றி வருவதாகக் கடந்த 2012 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டு உறுதிசெய்யப்பட்டது.




கெப்லர் விண்கலம் தனது செயற்பாட்டுக் காலத்தில், ஒரு விண்மீனை அதன் இரண்டு கோள்களும் 45 பாகையில் சுற்றி வருவதைக் கண்டறிந்திருந்தது. இந்தக் கண்டுபிடிப்புக் குறித்து, மேலதிக ஆய்வுகளை விஞ்ஞானிகள் மேற்கொண்டபோதே, அந்த இரண்டு கோள்களும் மிகவும் சாய்வான நிலையிலும் அவற்றின் சூரியனின் சுழற்சிக்கு எதிர் திசையிலும் சுற்றுவது கண்டறியப்பட்டுள்ளது.

# செவ்வாய் செல்லவுள்ள 'பாம்பு ரொபோக்கள்'

ஐரோப்பிய ஆய்வாளர்கள் சிலர், செவ்வாய் கிரகத்திற்குப் பாம்பு ரொபோக்களை அனுப்பத் திட்டமிட்டுள்ளனர். பாம்பு போன்று நெளிந்து-வளைந்து செல்லும் ரொபோக்களை செவ்வாய்க்கு அனுப்புவதன் மூலம் செவ்வாயின் மூலை முடுக்குகளுக்குச் சென்று இவற்றால் ஆய்வுகளைச் செய்ய முடியும் என்று ஐரோப்பாவின் அடிப்படை விஞ்ஞான மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சிக்கான ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.




செவ்வாய் கிரகத்திற்கு இதுவரை பல்வேறு ஆய்வூர்திகள் அனுப்பப்பட்டுள்ளன. அவை செவ்வாயின் மண் மாதிரிகள், பாறைகள், காலநிலை என்பனவற்றை ஆராய்ந்து, தகவல்களை வெளியிட்டு வருகின்றன. ஆனால், செவ்வாய் சென்றுள்ள ஆய்வூர்திகளால் செல்ல முடியாத இடங்கள் மற்றும் மூலைமுடுக்குகளுக்குச் சென்று மண் மாதிரிகளை எடுத்து, அவற்றை ஆய்வுக்குட்படுத்தும் நடவடிக்கைகள் இன்னும் இடம்பெறவில்லை.

ஆகவே, அத்தகைய இடங்களுக்குச் சென்று, ஆய்வுகளை மேற்கொள்வதற்காகவே மேற்படி பாம்பு ரொபோக்களை அனுப்பத் திட்டமிட்டுள்ளது. இந்த முயற்சியினூடாக, செவ்வாய் குறித்து மேலும் பல தகவல்களை அறியக்கூடியதாக இருக்கும் என்று அவர்கள் கருதுகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் அம்மா-மகன் ஆகியோருக்கு இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**අම්මා:** **පුතා, කමල් විභාගයෙන් පාස් ද?**
புதா, கமல் விபாகயென் பாஸ் த?
அம்மா: **மகன், கமல் பரீட்சையில் சித்திபெற்றானா?**

**පුතා:** **ඔව් අම්මේ. එයාට ලකුණු 161යි.**
ஒவ் அம்மே. எயாட்ட லகுணு 161ய்.
மகன்: **ஆம் அம்மா. அவனுக்கு 161 புள்ளிகள்.**

**අම්මා:** **නැන්දට හරි සතුටු ඇති.**
நெந்தட்ட ஹரி சத்துட்டு எத்தி.
அம்மா: **மாமிக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்.**

**පුතා:** **ඔව් අම්මේ, නැන්දාට හරි සතුටුයි.**
ஒவ் அம்மே, நெந்தாட்ட ஹரி சத்துட்டுய்.
மகன்: **ஆம் அம்மா, மாமிக்கு மிக்க மகிழ்ச்சி.**

**අම්මා:** **එයා වෙන පාසලකට යයිද?**
எயா வென பாசலகட்ட யய்த?
அம்மா: **அவன் வேறொரு பாடசாலைக்குப் போவானா?**

**පුතා:** **ඔව් අම්මේ, එයා හොඳ පාසලකට යයි.**
ஒவ் அம்மே, எயா ஹொந்த பாசலகட்ட யய்.
மகன்: **ஆம் அம்மா, அவன் நல்லதொரு பாடசாலைக்குப் போவான்.**

**අම්මේ! අපි කමල්ට ඉගෙන ගන්න උදවු කරමු.**
அம்மே! அப்பி கமல்ட்ட இகென கன்ன உதவு கறமு.
**அம்மா! நாங்கள் கமலுக்குப் படிப்பதற்கு உதவி செய்வோம்.**

**අම්මා:** **මගේ පුතා කොච්චර හොඳ ද.**
**මම තාත්තාට කියන්නම් පුතේ.**
மகே புதா கொச்சற ஹொந்தத. மம தாத்தாட்ட கியன்னம் புதே.
அம்மா: **என்னுடைய மகன் எவ்வளவு நல்லம். நான் அப்பாவுக்குச் சொல்கிறேன் மகன்.**

**පුතා:** **හොඳ අම්මා.**
ஹொந்த அம்மா.
மகன்: **நல்ல அம்மா.**



### பயிற்சிகள்

**சிங்களத்தில் மொழிபெயர்க்க**

01. மாமிக்கு மிக்க மகிழ்ச்சி.
 ..................................................
02. பாடசாலைக்குப் போவானா?
 ..................................................
03. படிப்பதற்கு உதவி செய்வோம்.
 ..................................................

**இடைவெளிகளை நிரப்புக**

1. **නැන්දාට හරි ..............................**
2. **හොඳ .............................. යයි.**
3. **ඉගෙන ගන්න ................ කරමු.**




இறந்தகால தனி வாக்கியங்களில் (Past Simple Tense) காணப்படுகின்ற வினா வாக்கியங்கள் (Interrogative Sentence), உடன்பாடு வாக்கியங்கள் (Affirmative Sentence) மற்றும் எதிர்மறை வாக்கியங்கள் (Negative Sentence) ஆகிய மூன்றையும் மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) பொதி மேசையில் இருந்து கீழே விழுந்ததா? (வினா)
Did the parcel fall down from the table? (Interrogative)

(ஆ) ஆம், அது மேசையில் இருந்து கீழே விழுந்தது. (உடன்பாடு)
Yes, it fell down from the table. (Affirmative)

(இ) இல்லை, அது மேசையில் இருந்து கீழே விழவில்லை. (எதிர்மறை)
No, it did not fall down from the table. (Negative)

* Did the parcel fall down?
 பொதி கீழே விழுந்ததா?
* Yes, it fell down.
 ஆம், அது கீழே விழுந்தது.
* No, it didn't fall down.
 இல்லை, அது கீழே விழவில்லை.

(ஈ) அந்தப் பையன் யன்னலை உடைத்தானா? (வினா)
Did the boy break the window? (Interrogative)

(உ) ஆம், அவன் யன்னலை உடைத்தான். (உடன்பாடு)
Yes, he broke the window. (Affirmative)

(ஊ) இல்லை, அவன் யன்னலை உடைக்கவில்லை. (எதிர்மறை)
No, he did not break the window. (Negative)

* Did the boy break?
 அந்தப் பையன் உடைத்தானா?
* Yes, he broke.
 ஆம், அவன் உடைத்தான்.
* No, he didn't break.
 இல்லை, அவன் உடைக்கவில்லை.

(எ) பூனை மதிலின் மேலாகப் பாய்ந்ததா? (வினா)
Did the cat jump over the wall? (Interrogative)

(ஏ) ஆம், அது மதிலின் மேலாகப் பாய்ந்தது. (உடன்பாடு)
Yes, it jumped over the wall. (Affirmative)

(ஐ) இல்லை, அது மதிலின் மேலாகப் பாயவில்லை. (எதிர்மறை)
No, it did not jump over the wall. (Negative)

* Did the cat jump?
 பூனை பாய்ந்ததா?
* Yes, it jumped.
 ஆம், அது பாய்ந்தது.
* No, it didn't jump.
 இல்லை, அது பாயவில்லை.


**குறிப்பு:** fall- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)
fell- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)

* break- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)
 broke- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)
* jump- நிகழ்கால வினைச்சொல் (Present Tense Verb)
 jumped- இறந்தகால வினைச்சொல் (Past Tense Verb)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளிர்கரம்




ஒரே மாதிரியான உருவிற்கு நிறந்தீட்டுக.


கார் ஒன்றை அமைப்போம்.



அடுத்து வரக்கூடிய உருவை வரைக.



உருக்களை வெட்டிப் பொருத்தமாக ஒட்டுக.





ஊடக பாடநெறி 60

# மக்கள் தொடர்பாடலின் இயல்புகள்


**(1) மீள் ஆக்க நிலை (Reproduction)**

தொடர்பாடுபவரினால் அனுப்பப்படும் தகவல், பெறுபவரிடம் அதே இயல்புடன் சென்றடைவதில்லை. அதில் மீள் ஆக்கநிலை, செயன்முறை இடம்பெறுகின்றபோதுதான் தகவல் கடத்தப் படவோ அல்லது செலுத் தப்படவோ வாய்ப்புகள் உருவாகும். அச்சு ஊடகங்களில் சொற்கள், படங்கள், நிறம் உள்ளடக்கிய எழுத்துமூல வடிவமைப்பு மீளாக்க நிலைக்குட்படுத் தப்படுகின்றன. வானொலியில் மனித குரல், இயற்கை ஒலிகள், மீளாக்கம் செய்யப்படுகின்றன. தொலைக்காட்சியில் ஒலியுடன் காட்சி ரீதியில் செயல்கள், நிறம் மீளாக்கம் செய்யப் படுகின்றன.




**(2) சுற்றுநிலை (Circulation)**

சுற்றுநிலை என்பது மீளாக்கநிலையின் விரிவாக அமைகின்றது. தகவல் சுற்றுநிலைக்கு உட்படுத் தப்படாவிட்டால், செலுத் தப்படமுடியாத நிலைமை உருவாகும். தகவலை மீளாக்கம் செய்தால் மட்டும் போதாது. குறித்த தகவலைப் பெறுவதற்குப் பெறுநர் இருத்தல் அவசியமாகும். இதனடிப்படையில்தான் தகவல் பரிமாற்றத்தின் செலுத்து நிலைத் திறன் காணப்படும்.



**(3) பின்னூட்டு நிலை (Feedback)**

குறித்த தகவலைப் பெறுகின்றவரின் நிலைமையுடன் தொடர்புபட்டதாக, பின்னூட்டு தன்மையை இனங்காணக்கூடியதாகவுள்ளது. தகவலை ஏற்றுக்கொள்ளும் நிலையை குறிப்பதாக சுட்டிக்காட் டப்படுகின்றது. லாஸ்வெல் அவர்களின் தொடர்பாடல் மாதிரியில் இறுதியில் குறிப்பிடப்படுகின்ற செயற்கூறான தாக்கம் அல்லது விளைவு என்ற நிலையைப் புலப்படுத்துவதாக அமைகின்றது.

**(4) ஆதரவுநிலை (Support)**

மக்கள் தொடர்பு என்பது கருவி வழியை ஆதாரமாகக்கொண்டு நிறுவனமயப்பட்ட ரீதியில் முன்னெடுக் கப்படுவது. ஆகவே, பெருமளவு மூலதனம் அடிப்படையானதாக அமைகின் ... விளம்பரங்கள் ஊடாகப் ... ளவு நிதிதிரட்டப் பட்டு, ஊடக நிறுவனத்தின் வருமானத்துடன் உள்ளடக்கப்பட்டு, மக்கள் தொடர்பு செயற்பாடுகளுக்கு வலுவூட்டப்படுகின்றது.

**(5) உரிமைநிலை (Ownership)**

வெகுசன ஊடக உரிமை நிலையைப் பொறுத்துத்தான் மக்கள் நம்பிக்கைத் தன்மை கட்டியெழுப்பப்படுகின்றது. ஊடக உரிமைநிலையை அரசு, தனியார் நிலையில் வகைப்படுத்தி நோக்க முடிகின்றது. இத்தகைய பின்னணியிலேயே




ஊடகங்களினால் முன்வைக்கப் படுகின்ற விடயங்களின் இயல்புகள், நம்பிக்கைகள் கட்டியெழுப் பப்படுகின்றன. (தொடரும்)

பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இமயமலைத் தொடர்

இமயமலை இந்தியத் துணைக்கண்டத்தின் சமவெளியையும் திபெத்திய மேட்டு நிலத்தையும் பிரிக்கும் ஒரு மலைத்தொடர் ஆகும். இது ஆசியாவில் அமைந்துள்ளது. உலகிலேயே ஒப்பற்ற மிகப்பெரிய, மிகவுயர்ந்த, மாபெரும் மலைத்தொடர் இமயமலைத் தொடர் ஆகும்.

இமயமலைத்தொடரில், நூற்றுக்கு மேற்பட்ட சிகரங்கள் உள்ளன. இதில் சிலவற்றின் உயரம் 7,200 மீற்றருக்கு மேலாகும். இதற்கு மாறாக ஆசியாவுக்கு வெளியே உள்ள மிகப்பெரிய சிகரம் அக்கோன்காகுவா அன்டேஸ் மலைத்தொடரில் உள்ளது.

இமயமலை மூன்று இணையான உப தொடர்களைக் கொண்டது. இது ஐந்து நாடுகளில் பரவியுள்ளது. அவை பூட்டான், இந்தியா, நேபாளம், சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகும். இதில் முதல் 3 நாடுகளில் அதிகமான மலைத்தொடர்கள் பரவியுள்ளன. இமயமலையானது வடக்கே திபெத்திய பூமியையும், வடமேற்கே காரகோரம் மற்றும் இந்துக்குஸ் மலைத் தொடரையும் தெற்கே சிந்து கங்கை சமவெளியையும் எல்லையாகக் கொண்டுள்ளது. உலகின் பெரிய நதிகளான சிந்து, கங்கை மற்றும் பிரமபுத்திரா ஆகியன இம் மலைத்தொடரில் உற்பத்தியாகின்றன.

ரிஸ்லா ரய்ஸ்தீன்,
ஹிஸ்புல்லாஹ் மத்.கல்.,
குருணாகலை.

# கிளியே!



*கூண்டினுள் அடைபட்டுக்*
*கிடக்கும் கிளியே!*
*உன்னைப் பார்த்தால் கலங்கும்*
*என்விழி!*

*சிவப்பு நிறமோ உன் சொண்டு- ஆனால்,*
*நீ அடைபட்டிருப்பதோ ஒரு கூண்டு!*

*சின்னஞ்சிறு பழங்களை உண்ணும் உன் பிஞ்சு வாய்,*
*உன்னோடு போட்டியிட வந்தால் என்னை மிஞ்சுவாய்,*
*தந்திரமாய் அடைபட்ட நீ*
*சுதந்திரமாய் எப்போது பறந்து செல்வாய்!?*

ம.ஹருஸ்ராஜ்,
மட்/சிவானந்தா வித். தே.பாட.,
மட்டக்களப்பு.

# கடவுள் துணை



மாலை நேரம். வயதான குருவுடன் சீடர்கள் உலாவச் சென்றனர். குருவின் கையில் ஒரு கோல். அவர் அதை ஊன்றியவாறு நடந்து வந்துகொண்டிருந்தார். வழியில் சீடன் ஒருவன், "குருவே எனக்கு ஒரு சந்தேகம்... கேட்கலாமா?" எனத் தொடங்கினான். குரு, "தயங்காமல் கேள்" என்றார்.

"குருவே 'எல்லாம் அவன் செயல்' என்கிறார்களே? கடவுள்தான் எல்லாம் செய்கின்றாரா? நாம் ஒன்றுமே செய்யவில்லையா?" என்று கேட்டான்.

குரு, அமைதியாகச் சிறிது தூரம் சென்ற பின், நின்றார். வினா எழுப்பிய சீடனைப் பார்த்துக் கேட்டார்.

"உங்களோடு இவ்வளவு தூரம் நடந்து வந்துள்ளேனே, நடந்தது யார்?"

"நீங்கள்தான் குருவே" என்றான் சீடன்.


"அப்படியானால், நான் வைத்திருக்கும் இந்த ஊன்றுகோலின் வேலை என்ன?" என்று கேட்டார்.

"நீங்கள் நடப்பதற்கு உதவுகிறது இந்த ஊன்றுகோல்" என்றான் அந்தச் சீடன்.

"சரியாகச் சொன்னாய். நான் நடந்தால்தான் இந்த ஊன்றுகோல் எனக்கு உதவும். அப்படித்தானே! கடவுளும் இந்த ஊன்றுகோல் போன்றுதான். நாம் செயற்பட்டால், அதற்குத் தடை நேராமல் காக்கும் பணியைக் கடவுள் செய்வார். எனவே, செயல் உன்னுடையது; துணை கடவுளுடையது" என்றார் குரு.



# கல்வெட்டுக்கள்





கல்வெட்டுக்கள் நான்கு வகைப்படுகின்றன. அவை, குகைக் கல்வெட்டு, குன்று கல்வெட்டு, தூண் கல்வெட்டு, கற்பலகைக் கல்வெட்டு என்பனவாகும். தொல்பொருள் அகழ்வின்போது விரைவாகக் கிடைத்தவற்றுள் கல்வெட்டு என்னும் பொறிப்புக்கள் முக்கியமானவை. இலங்கையின் வரலாற்றி[illegible]தனை அறியக்கூடிய நிறையக் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. கல்வெட்டுக்கள் வரலாற்றில் உண்மையையும் தெளிவையும் காட்டுகின்றன. கல்வெட்டுக்களால் உள்ள எழுத்துக்கள் இலகுவில் அழியாத தன்மை பெற்றவை. அவற்றில் உள்ள விடயங்களை நேரடியாகவும் சுருக்கமாகவும் அவை கூறுகின்றன.

முபஸ்ஸிரா ஸமீட்

## விளையாட்டு அணி வீரர்களின் எண்ணிக்கை

| விளையாட்டு வகைகள் | விளையாட்டு வீரர்கள் |
|---|---|
| ★ கிரிக்கெட் | 11 |
| ★ உதைபந்தாட்டம் | 11 |
| ★ கரப்பந்தாட்டம் | 06 |
| ★ வலைப்பந்தாட்டம் | 07 |
| ★ எல்லே | 11 |
| ★ ஹொக்கி | 11 |
| ★ கபடி | 12 |
| ★ றக்பி | 15 |

நூறுல் ஸாதா,
களு/அல்ஹம்றா ம.வித்., தர்கா நகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.11.27 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 444
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

## 1

இங்குள்ள எழுத்துக்களை வைத்து, குறைந்தது 10 சொற்களையேனும் அமைக்க




## 2 ஒத்தகருத்துச் சொல் தருக

1. ஆசனம் - ..............................
2. தலை - ..............................
3. பூங்கா - ..............................
4. குன்று - ..............................
5. உடை - ..............................
6. குரு - ..............................

## 5 கூட்டுக

1+1= ☐

1+3= ☐

1+2= ☐

1+7= ☐

1+4= ☐

1+8= ☐

1+9= ☐


1+10= ☐

1+5= ☐


1+6= ☐



## 4 ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக




## 3 அடுத்து வர வேண்டிய உருவில் வட்டமிடுக




## அறிவுக்கு விருந்து - 441 விடைகள்

போட்டி: 01



போட்டி: 02



போட்டி: 03



போட்டி: 04

1. தேங்காய்
2. 8
3. கிரேக்கம்
4. கண்
5. எவரெஸ்ட்

போட்டி: 05

1. சிறுமை - பெருமை
2. மதிப்பு - அவமதிப்பு
3. சாதகம் - பாதகம்
4. நிராசை - ஆசை
5. குவிவு - குழிவு

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 441 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

போட்டி: 01
ஜெ.ரிக்சிகா, வவுனியா.

போட்டி: 02
கே.டேஞ்சனா, கல்லடி.

போட்டி: 03
லுக்மான் ஜெஸ்லி, வேறவத்தை.


போட்டி: 04
சு.அபிசன், கிளிநொச்சி.

போட்டி: 05
எஃப்.முஸ்தாக், கொழும்பு-02.

பாராட்டுப் பெறுவோர்:

- எல்.இரேஷன், கிருலப்பனை.
- எஃப்.சம்னா, அம்பகோட்டே.
- எம்.ஸாபிர், நாவலப்பிட்டி.
- எம்.சிம்மித், மாவடிப்பள்ளி.
- சு.சுதா, மஸ்கெலியா.
- பி.டோரியஸ், பாழையூற்று.
- எஃப்.இஸ்ரா, அட்டாளைச்சேனை-06.
- அ.பிறவீன், சித்தாண்டி-03.
- எம்.பி.நாஸிப், கஹட்டோவிட்ட.
- எம்.ஷஹாம், பஸ்யால.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.60



### மேலிருந்து கீழ்

01. பாக்களை இயற்றும் திறனுள்ளவர்.
04. 'அழு' எதிர்ப்பதம். (தலைகீழ்)
05. கிளைகள் பரப்பி, கனி தரும் மரமொன்று.
06. பிடிவாதம். (தலைகீழ்)
07. தகராறு.
11. 'தீமையானது' என்றும் பொருள் தரும். (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

01. முல்லைக்குத் தேர் கொடுத்தவர்.
02. 'விடுகதை' என்றும் அர்த்தப்படுத்தலாம்.
03. வாழ்.
05. வீரத்தில் வல்லவன்.
08. பூ. (குழம்பியுள்ளது)
09. ஒட்டை. (குழம்பியுள்ளது)
10. கண்ணாடியில் தெரிவது. (குழம்பியுள்ளது)


## குறுக்கெழுத்துப் போட்டி இல.59 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 சோ | ம் | 2 ப | ல் | ■ | 3 ஆ |
| தி | ■ | ங் | ■ | 4 தோ | சை |
| ட | ■ | 5 க | ங் | கை | ■ |
| ம் | ■ | ய | ■ | ■ | பி |
| ■ | 6 அ | ம் | 7 ப | ல | ம் |
| 8 பா | வை | ■ | னை | ■ | 9 து |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



சு.ஆர்த்திகா,
யா/வே.ம.உ.பாட., யாழ்ப்பாணம்.




என்.ஜெயஜனனி,
இந்து மத்திய கல்., புத்தளம்.



எம்.டி.ரோன்,
முகத்துவாரம் இ.கல்லூரி,
கொழும்பு-15.




வ.மு.ஸல்மான்,
மூதூர் மத்திய கல்., மூதூர்.




எம்.சமீர்,
அஸ்ஹர் மத்திய கல்., அக்குறனை.



எஃப்.ஷிஃப்ரா,
இக்கிரிகொல்லேவ மு.ம.வித்.,
இக்கிரிகொல்லேவ.



எஃப்.அகிலா,
அல்-அக்ஸா மு.ம.வித்.,
எஹலியகொடை




ர.சாமிமகான்,
சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.



தெபத்கமவைச் சேர்ந்த சண்முகநாதன்-சுபாசினி தம்பதியரின் செல்வப் புதல்வன் யதுர்சன், 26.11.2013 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.



தர்கா நகரைச் சேர்ந்த பைஸல்-முல்ஹிமா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் முர்ஷித், 25.11.2013 அன்று தனது பதின்மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்: முனவ்வரா)*

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



நமடகஹவத்த-கலேவலயைச் சேர்ந்த ஷாகிர்-ஷர்மிலா தம்பதியரின் செல்வப் புதல்வி மஷா, 21.11.2013 அன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால், சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



புஸ்ஸல்லாவையைச் சேர்ந்த சலீம்-சியாமா தம்பதியரின் செல்வப் புதல்வன் எம்.செய்ன், 16.11.2013 அன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் பல்கலையும் கற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



வெலிமடையைச் சேர்ந்த நௌஃபர்-முனௌவரா தம்பதியரின் செல்வப் புதல்வன் எம்.நவீட், 10.11.2013 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் பல்கலையும் கற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



திருகோணமலை-உவர்மலையைச் சேர்ந்த பேரின்பராசா-வனிதா தம்பதியரின் செல்வப் புதல்வன் மோகனகர்சன், 07.11.2013 அன்று தனது ஒன்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் கல்வியில் சிறந்து, பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.



ஹொரவப்பொத்தானையைச் சேர்ந்த நிஸார்-நஸீரா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹம்மது அஹ்த்தீர், 05.11.2013 அன்று தனது ஒன்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று, நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்: சிரோசிடீர)*

# உலகப் புகழ்பெற்ற ஓவியர்கள் சிலர்...

குஸ்டவ் க்ளிம்ட், *1862* ஆம் ஆண்டு, ஜூலை *14* ஆம் திகதி, ஒஸ்ட்ரியாவின், வியன்னா நகரின் Baumgarten எனுமிடத்தில் பிறந்தார்.

க்ளிம்ட்டும் அவரது இளைய சகோதரரான ஏர்ன்ஸ்ட்டும் தமது இளமைக் காலத்திலேயே வியன்னாவிலுள்ள ஓவியம் மற்றும் கைவினைப் பள்ளியில் சேர்க்கப்பட்டனர். கஸ்டவ் க்ளிம்ட், *1883* ஆம் ஆண்டு வரை அங்கு கட்டடக்கலை ஓவியம் உட்பட, ஓவியக் கலையின் அனைத்து நுட்பங்களையும் கற்றுத் தேர்ந்தார். அப்போது பள்ளியில் உடன் கற்ற ஃபிரான்ஸ் மாட்ச்சுடன் நட்பு ஏற்பட்டது. க்ளிம்ட் சகோதரர்கள் இருவரதும் ஃப்ரான்ஸ் மாட்ச் என்பவரினதும் திறமைகளை அறிந்த இவர்களது பேராசிரியரான ஃபெர்டினன்ட் என்பவர், பல மாளிகைகளின் அலங்கார வடிவமைப்புக்களுக்காக, இவர்கள் மூவரையும் சிபாரிசு செய்தார். இதனை அடுத்து, ஒஸ்ட்ரிய மன்னர் உட்பட, பல்வேறு தரப்புகளிலிருந்தும் இவர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைத்தன.



கஸ்டவ் க்ளிம்ட்
(1862-1918)



வாழ்க்கை மரம்

*1883* இல் இவர்கள் மூவரும் ஓவியப் பள்ளியில் இருந்து விலகி, தங்களுக்குச் சொந்தமாக ஓவிய அரங்கொன்றினை ஏற்படுத்திக் கொண்டனர். நாளடைவில், வியன்னாவில் உள்ள பல மாளிகைகள் மற்றும் பிரபல கட்டடங்களில் கூரை அலங்காரங்கள்-ஓவியம் தீட்டல், சுவர் ஓவியங்கள், திரைச்சீலை அலங்காரங்கள்,




விசிறியுடன் பெண்

கட்டடங்களின் தூண்களில் ஓவியம் வரைதல்-சிற்பங்களைச் செதுக்குதல் என்பனவற்றைச் செய்வதற்கு வாய்ப்புக்கள் கிடைத்தன. அத்துடன், அங்கு பயன்படுத்தப்படும் மேசைகள், கதிரைகள், கோப்பைகள் போன்றவற்றில் அலங்காரங்களைச் செய்தல், கலைநயமாக வடிவமைத்தல் போன்ற பணிகளும் அதில் அடங்கியிருந்தன. இவ்வாறு தனது திறமைகளைப் பல இடங்களிலும் வெளிப்படுத்தி- நிரூபித்ததால், கஸ்டவ் க்ளிம்ட் பலரினதும் பாராட்டினைப் பெற்றுக்கொண்டார். ஒஸ்ட்ரியா மட்டுமன்றி உலகளவில் புகழ்பெற்ற இவர், *1918* ஆம் ஆண்டு பெப்ரவரி 6 ஆம் திகதி தனது 55 ஆவது வயதில் உயிர் நீத்தார்.

-ஜீநு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடிப்புக்கள்

குக்லியெல்மோ மார்க்கோனி (Guglielmo Marconi)
1895-இத்தாலி

வானொலி

ஸ்டென்லி மெஸோர் (Stanly Mazor )
1971-அமெரிக்கா

நுண்செயலி (Microprocessor)




எட்வட் மிச்செலின் (Edouard Michelin)
1889 - பிரான்ஸ்

காற்றடைப்பு டயர்




பவல் மொல்(ச்)சனோவ் (Pavel Molchanov)
1930-ரஷ்யா

வானிலை அளவுருக்கருவி




அல்ஃபிரட் நொபெல் (Alfred Nobel)
1867 - சுவீடன்

டைனமைட்




லூட்விக் நொபெல் (Ludvig Nobel)
1876-சுவீடன்

எண்ணெய்த்தாங்கி

# உயிரியல் வகைப்பாடு

## குங்குமப்பூ



குங்குமப்பூ என்பது நிஜமான மலரல்ல. *Crocus Sativus* என்ற அறிவியல் பெயர் கொண்ட தாவர மலரின், சூல்முடிகளே 'குங்குமப்பூ' ஆகும். இதன் பொதுப் பெயர் *Saffron*. தெற்கு ஐரோப்பாவைத் தாயகமாகக் கொண்ட குங்குமப்பூ, இந்தியாவில் ஜம்மு-கெஷ்மீரில் மிகுதியாக விளைகிறது. ஸஃப்ரொன் மலர்களில் இருந்து பெறப்படும் 'குங்குமப்பூ' ஸஃப்ரொனால் எனும் குறிப்பிடத்தக்க எண்ணெய்ப் பொருளைக் கொண்டுள்ளது.

குங்குமப்பூவில் உள்ள நிறமிகள் உணவுப் பொருட்களுக்கு நிறமூட்டுகின்றன. அது மட்டுமன்றி, சிறந்த நோய் எதிர்ப்புப் பொருளாகவும் செயல்படுகின்றது. மேலும், மன அழுத்தம், புற்றுநோய் மற்றும் நோய்த் தொற்றுகளில் இருந்து, காக்கும் திறனை நோய் எதிர்ப்பு மண்டலத்திற்கு வழங்குகின்றது. குங்குமப்பூ செரிமானத்திற்குத் துணைபுரியும். சோர்வு நீக்கும் தன்மையும் குங்குமப்பூக்களுக்கு உண்டு. தாமிரம், பொட்டாசியம், கல்சியம், மெங்கனீஷ், இரும்பு, செலினியம், துத்தநாகம், மெக்னீசியம் போன்ற அத்தியாவசியத் தாதுப் பொருட்கள் குங்குமப் பூவில் காணப்படுகின்றன.

| | |
|---|---|
| திணை (இராச்சியம்) | : தாவரம் |
| தரப்படுத்தப்படாத | : பூக்குந் தாவரம் |
| வரிசை | : *Asparagales* |
| குடும்பம் | : *Iridaceae* |
| துணைக்குடும்பம் | : *Crocoideae* |
| பேரினம் | : *Crocus* |
| இனம் | : *C.sativus* |

## நந்தியாவட்டை



நந்தியாவட்டை (*Ervatamia divaricata, Tabernaemontana divaricata, Crepe Jasmine*) ஒரு மருத்துவ மூலிகைச் செடியாகும். இதன் பூவும் இலையும் மருத்துவக் குணங்களைக் கொண்டுள்ளன.

| | |
|---|---|
| திணை (இராச்சியம்) | : தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : பூக்குந் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : *Eudicots* |
| (தரப்படுத்தப்படாத) | : *Asterids* |
| வரிசை | : *Gentianales* |
| குடும்பம் | : *Apocynaceae* |
| பேரினம் | : *Rauvolfioideae* |
| இனம் | : *Tabernaemontana* |

## வாகை மலர்



வாகை(*Albizia lebbeck*) என்னும் மரம் தெற்காசியாவைப் பூர்வீகமாகக் கொண்டது. இம்மரம் பிற வெப்ப மண்டலப் பகுதிகளில் பரவலாகக் காணப்படுகின்றது. இது வாகை இனத்தைச் சேர்ந்தது. வாகை மரம் வலுவான மரமாகவும், பழைமையான மரங்களுக்குள் ஒன்றாகவும் கருதப்படுகின்றது. சங்ககாலத்தில் போரில் வெற்றபெறும் வீரர்களுக்கு வாகை மலர் சூட்டப்பட்டு வெற்றிக் களிப்பை பகிர்ந்ததாக தமிழ் இலக்கியங்களில் குறிப்புகள் உள்ளன. 'வெற்றி வாகை சூடினான்' எனும் தொடர் இன்னமும் வழக்கிலுள்ளது.

| | |
|---|---|
| திணை (இராச்சியம்) | : நிலைத்திணை |
| பிரிவு | : பூக்கும் நிலைத்திணை |
| (தரப்படுத்தப்படாத) | : இருவித்திலைத் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : *Rosids* |
| வரிசை | : *Fabales* |
| குடும்பம் | : *Fabaceae* |
| பேரினம் | : *Albizia* |
| இனம் | : *A.lebbeck* |

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 2007

**21 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 2007**
**இங்கிலாந்து**

38,074 சாரணர்கள்




Hylandspark

158 நாடுகள்

ஜூலை 27-ஓகஸ்ட் 8




**1907** ஓகஸ்ட் முதலாம் திகதி, இங்கிலாந்து நாட்டில் ரொபர்ட் ஸ்டீபன்சன் ஸ்மித் பேடன் பவல் அவர்களால், 20 சிறுவர்களுடன் சோதனை முகாமாகத் தோன்றிய சாரணர் இயக்கம், நூறு ஆண்டுகள் நிறைவெய்திய நிலையில், இன்று உலகம் முழுவதும் 28 மில்லியன் உறுப்பினர்கள்






உள்ளடக்கிய இயக்கமாகத் திகழ்கின்றது. இந்த இயக்கத்தின் இருபத்தொராவது உலக சாரணர் ஜம்போரி இங்கிலாந்தின் லண்டனில் நடைபெற்றது. இதில் 158 நாடுகளைச் சேர்ந்த 38,074 சாரணர்கள் கலந்துகொண்டனர்.




இந்த இயக்கத்தின் இருபத்தொராவது உலக சாரணர் ஜம்போரிக்கு, இங்கிலாந்தின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்திருந்த Ehelms Fold HylandsPark 740 ஏக்கர் நிலப்பரப்பின் 300 ஏக்கர் முகாமிற்குப் பயன்படுத்தப்பட்டது. இது 16 துணை முகாம்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. 28.07.2007 அன்று இருபத்தொராவது உலக சாரணர் ஜம்போரியின் ஆரம்ப விழா நடைபெற்றது. 'One World, One Promise' என்ற



தொனிப்பொருளில் இது அமைந்தது.

தினமும் முகாமில் 'One World' என்ற பெயரில் இந்த இருபத்தொராவது உலக சாரணர் ஜம்போரி நிகழ்ச்சிகளைத் தாங்கிய 40,000 நாளிதழ்கள் அச்சிடப்பட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டன. வந்திருந்த சாரண சாரணியருக்கு வழிகாட்ட 8000 பேர் முன்கூட்டியே வந்து சேர்ந்தனர். FM வானொலி நிலையம் அமைக்கப்பட்டு முகாம் நிகழ்ச்சிகள் 24 மணி நேரமும் ஒலிபரப்பப்பட்டன.

நீர் விளையாட்டுகள், நடைபெற்றதுடன், உலக சாரணர் அமைப்பின் செயலாளர், அனைவருக்கும் வாழ்த்துக் கூறி வரவேற்றார்.

(இதன் மிகுதி தொடரும்)

## சாரணர் இயக்க உலக அமைப்பு WOSM (World Organization of the Scout Movement)

01 ஓகஸ்ட் 1907 இல் இங்கிலாந்தில் Brownsea தீவில் பேடன் பவல் அவர்களால் முதலாவது பரிசோதனை முகாம் நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகளும் அங்கத்தவர்களது விபரங்களும்.

| நாடு | சாரணர் உறுப்பினர் | WOSM இல் சேர்ந்த ஆண்டு | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| பேலிஸ் | 3,041 | 1987 | 1911 |

(தொடரும்)

தொகுப்பு: ஜனாதிபதி சாரணன் **யோ.கேதீசன்**
SLTS BP.A.WB(SL). IAP (India)

## விரைவில்...

**உங்கள் சாரணர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு சாரணர் ஆலோசகர் வருகின்றார். உங்கள் பிரச்சினைகளுக்குத் தெளிவான விளக்கங்களை அவர்மூலம் தெரிந்துகொள்ளலாம்.**

## கை சமிக்ஞைகள்


அணிவகுப்புகள்


ஓடுங்கள்


அமைதியாகுங்கள் அல்லது நிறுத்துங்கள்


அமருங்கள், ஒளிந்திருங்கள்


குழுக்களாகக் கலைந்து செல்லுங்கள்


இரு அணியாக வாருங்கள்


இன்னுமின்னும் தூரம் செல்லுங்கள்


என் எதிரே குறுக்காக அணிவகுங்கள்


வரிசையாக வரவும் உடனே வரவும்


கலைந்து செல்லுங்கள்



பரவாயில்லை அது சாதாரண விடயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெஜிக் உலகில்...

# மோதிரத்திற்கு உயிர் கொடுப்போம்

இந்த வாரம் மெஜிக் உலகப் பகுதியில் மோதிரத்திற்கு உயிர் கொடுக்கும் வித்தை பற்றி அறிந்துகொள்வோம். உயிர் கிடைத்த மோதிரம், றப்பர் பட்டியினால் இழுபட்டு, எவ்வாறு மேல் நோக்கி எழும்பும் என்பதை இதன்மூலம் நீங்கள் அறிந்துகொள்ளலாம்.




**தேவையானவை:**

றப்பர் பட்டி, மோதிரம், கத்தரிக்கோல் ஆகியவை.


**செய்முறை**

**முதலாவது படிமுறை:**




றப்பர் பட்டி ஒன்றை எடுத்து, அதனை ஓரிடத்தில் வெட்டிக்கொள்ளுங்கள். மோதிரத்தை அந்த றப்பர் பட்டியின் நடுப்பகுதி வரை அனுப்புங்கள். இதன்போது, நீங்கள் மகா ஆச்சரியமொன்றை நிகழ்த்தப்போவதைப் போன்று கைகளால் மாயாஜால அசைவுகளை வெளிப்படுத்துங்கள்.

**2 ஆவது படிமுறை:**




றப்பர் பட்டியினை இயலுமானவரை இழுத்துக்கொள்ளுங்கள் (விரல்களுக்கு இடையில் உள்ள நீளத்திற்கு ஏற்ப).

**3 ஆவது படிமுறை:**



றப்பர் பட்டியின் ஒரு முனையை ஒரு கையில் மறைத்து வைத்துக்கொள்ளுங்கள் (இந்தப் பகுதி நீளமாக இருக்கும் அளவுக்கு மாயாஜால வித்தை காட்டும் நேரமும் அதிகரிக்கும்). அப்பொழுதான் மாயாஜால வித்தையைச் சிறப்பாக செய்ய முடியும்.

**4 ஆவது படிமுறை:**





இப்பொழுதுதான் நீங்கள் மாயாஜால வித்தையினைக் காட்டப் போகின்றீர்கள். மறைத்து வைக்கப்பட்ட றப்பர் பட்டியின் முனையினை மெதுவாக விடுவியுங்கள். இப்பொழுது... மாய சக்தியினால் மோதிரத்திற்கு உயிர் வந்து, அது றப்பர் பட்டி வழியே மேல்நோக்கி எழும்.

## ரகசியம்

பார்வையாளர்கள் குறிப்பிட்டளவு தூரத்தில் இருப்பது மாய்ாஜால வித்தையின் வெற்றிக்கு வழிவகுக்கும். பார்வையாளர்களின் கவனத்தினை மோதிரம் மீது திசை திருப்புங்கள். அதற்காக ,மோதிரத்தை நன்றாக அவதானியுங்கள் என்று அவர்களுக்குக் கூறுங்கள். அப்பொழுது அவர்களின் கவனம் மோதிரத்தில் மட்டுமே திசை திருப்பப்பட்டிருக்கும். அத்துடன், தூரம் காரணமாக றப்பர் பட்டியின் அசைவினை அவதானிப்பதும் பார்வையாளர்களுக்குக் கடினமாக இருக்கும்.

றப்பர் பட்டியினை மோதிரத்தினுள் செலுத்துவதற்கு முன்னர் மாயாஜால வார்த்தைகளையும் மாயாஜால அசைவுகளையும் வெளிப்படுத்தி, மோதிரத்திற்கு உயிரூட்டுவது போன்று செயற்படுங்கள். இதனால், பார்வையாளர்களின் ஆர்வத்தினைத் தூண்ட முடியும். வித்தையைக் காட்டும்போது றப்பர் பட்டி யினை மெதுவாக அசையுங்கள். அதனால், சிறிய அசைவு காரணமாக, மோதிரம் மேலே எழ ஆரம்பிக்கும். இதனை நீங்கள் சற்றுப் பயிற்சி செய்துவிட்டு மேற்கொள்வதே சிறந்தது.

**மெஜிக் மாமா**

# 2013, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



ஆயிஷா அஸ்மா, 175 புள்ளிகளைப் பெற்றுள்ளார். உயன்வத்த,நூராணியா ம.வித்தியாலய மாணவியான இவர், மொஹமத்-ஹஸீனா, தம்பதியரின் புதல்வியாவார்.



ரெ.தொம்சன், 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார். மன்/ஆண்டான்குளம் றோ.க.த.பாடசாலை மாணவனான இவர், ரெனிஸ்கிளாஸ்-ரெஜினா தம்பதியரின் புதல்வராவார்.



சி.டனிஸ், 139 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், யா/கொக்குவில் இ.ஆ.பாடசாலை மாணவராவார்.



கே.ராதியா, 176 புள்ளிகளைப் பெற்றுள்ளார். எஹலியகொட, அல்-அக்ஸா மு.ம. வித்தியாலய மாணவியான இவர், ரிஸான்-ஹம்ஸியா தம்பதியரின் புதல்வியாவார்.



எச்.அஸ்ஃபா, 150 புள்ளிகளைப் பெற்றுள்ளார். மடவளை பஸார், அல்-முனவ்வரா ஆரம்பப் பாடசாலை மாணவியான இவர், ஹசன்-ரசீமா தம்பதியரின் புதல்வியாவார்.



கே/நூராணியா மு.ம.வித்தியாலய மாணவனான அஹமட் ஷஸ்னி, 171 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், முகர்ரம்-சியானா தம்பதியரின் புதல்வராவார்.



மட்/ஸாவியா மகளிர் வித்தியாலய மாணவியான எஃப்.ஜுமானா, 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



அ.யுஸ்ரின்ராஜ், 167 புள்ளிகளைப் பெற்றுள்ளார். மன்/பரிகாரிகண்டல் அ.த.க.பாடசாலை மாணவனான இவர், அருள்வாசகம்-தயாளசீலி தம்பதியரின் புதல்வராவார்.



எம்.ஸாபீர்,160 புள்ளிகளைப் பெற்றுள்ளார். க/சென்.மேரிஸ் கல்லூரி மாணவனான இவர், நிஸ்தார்-ஸரீனா தம்பதியரின் புதல்வராவார்.



எஃப்.ரீமா, 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார். ப/வெளிமடை மு.ம. வித்தியாலய மாணவியான இவர், றபைதீன்-ரிஹானா தம்பதியரின் புதல்வியாவார்.



கொ/அல்-ஹிக்மா கல்லூரி மாணவனான எஸ்.மாஹிர்,178 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மொஹிடீன்-அஸ்மா தம்பதியரின் புதல்வராவார்.



எஃப்.அர்சானா, 135 புள்ளிகளைப் பெற்றுள்ளார். மாவ/வாடிய தன்ன மு.வித்தியாலய மாணவியான இவர், தஸ்லிம்-அனீஸா தம்பதியரின் புதல்வியாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாரடைப்பை முன்கூட்டியே அறியக்கூடிய தொழில்நுட்பம்!




மாரடைப்பு ஏற்படுவதை முன்கூட்டியே அறியக்கூடிய புதுவகைத் தொழில்நுட்பமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறிப்பாகப் புற்றுநோயைக் கண்டுபிடிப்பதற்கெனப் பயன்படுத்தப்படுகின்ற 'ஸ்கேனிங்' முறையை அடியொட்டியே, இந்தப் புதிய கண்டுபிடிப்பும் மேற்கொள்ளப்படுகின்றது.



கதிரியக்கத்தைக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற இந்தத் தொழில்நுட்பமானது இதயத்திற்குச் செல்லும் இரத்தக்குழாய்களில் அடைப்புக்கள் ஏதும் ஏற்பட்டிருப்பின், அவற்றை ஒளிரச் செய்து, நுணுக்கமான ஸ்கேன் முறை மூலம் மருத்துவர்கள் குறித்த அடைப்புள்ள பகுதிகளைத் தெளிவாக இனங்கண்டு கொள்வதற்கு உதவுகின்றது. எனவே, இந்த வழிமுறையின் மூலம் இரத்தக் குழாயில் உள்ள அடைப்புக்கள் துல்லியமாக இனங்காணப்படுவதன் மூலம் ஏற்படக்கூடிய மாரடைப்பைத் தவிர்ப்பதற்கான மருத்துவச் சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும்.

# மின்குமிழில் இணைய வசதி




மின்குமிழ் மூலம் இணைய வசதியைப் பெறும் வழிமுறையொன்றைச் சீனா கண்டுபிடித்துள்ளது. இதற்கு 'LiFi' என்று பெயரிடப்பட்டுள்ளது.

அதாவது, ஒரு வோல்ட்டைக் கொண்ட எல்.ஈ.டி (LED) மின்குமிழ் (bulb) ஒன்றைப் பொருத்திவிட்டால் போதும், அந்த நொடியிலேயே இணைய வசதி செயற்படத் தொடங்கிவிடும். மின்குமிழை அணைத்துவிட்டால், இணையத் தொடர்பும் செயலிழந்துவிடும். இவ்வாறு ஒரு மின்குமிழை எரியவிடுவதன் மூலம் 4 கணினிகளில் இணைய வசதியைப் பயன்படுத்த முடியும்.

குறித்த 'LiFi'யானது விநாடிக்கு 150 மெகாபைட் வேகத்தைக் கொண்டிருக்கின்றது. 'ஷங்ஹாய்' பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியரான சினான் என்பவரே, இந்த மின்குமிழ் இணையத் தொடர்பைக் கண்டுபிடித்தவராவார்.

இந்தப் புதிய முறை எவ்வாறு சாத்தியப்படுகின்றதென்றால், குறித்த மின்குமிழில் இதற்கான 'மைக்ரோசிப்' பொருத்தப்பட்டிருக்கும். இதனூடாக அலைக்கற்றைகள் எழுப்பப்பட்டே இணைய வசதி உருவாக்கப்படுகின்றது. நொவெம்பர் 5 ஆம் திகதி நடைபெற்ற சர்வதேச கண்காட்சியில் இந்த 'LiFi' முறை பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. வழக்கத்தில் உள்ள WiFi முறையின்படி, ரேடியோ அலைகளைக்கொண்டே இணைய வசதி ஏற்படுத்தப்படுகின்றது. ஆனால், புதிய முறையான 'LiFi' மூலம் ஒரு மின்குமிழைக்கொண்டே இந்தக் காரியத்தைச் செய்ய முடிகின்றமையே இதன் சிறப்பாகும்.

இத்தகைய கண்டுபிடிப்பை மேற்கொண்ட சீனாவில் மாத்திரம் 60 கோடிக் கணக்கானோர் இணையத்தைப் பயன்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, நொவெம்பர் மாதம் 20 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday November 20, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org